# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

ilakku.org

வாராந்த மின்னிதழ்

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb


LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 297 | சனி, ஜுலை 27, 2024 | 16 பக்கங்கள்




# மொட்டுவை பிளவுபடுத்திய ரணில் குழம்பிப்போயுள்ள ராஜபக்ஷக்கள்!



அகிலன்



# சிங்கள வேட்பாளர்களுடன் பேசி முடிவு எடுக்கலாமா?

செவ்வி ஐங்கரநேசன் தலைவர், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம்



# இந்திய கடற்படை சந்தித்த பேரிழப்பு

வேல்ஸில் இருந்து அருஸ்

# ஊடகவியலாளர் ஈழம் சேகுவேரா காலமானார்



முன்னாள் போராளியும், ஊடகவியலாளரும், வவுனியா பிரஜைகள் குழுவின் ஊடகப் பேச்சாளரும், அரசியல் சமூக செயற்பாட்டாளருமான ஈழம் சேகுவேரா (இசைப்பிரியன்) வியாழக்கிழமை(26) காலை காலமானார்.

சுயாதீன ஊடகவியலாளராகவும், பத்தி எழுத்தாளராகவும், அரசியல் விமர்சகராகவும், கலைஞனாகவும் பல்துறைகளிலும் கால் பதித்தவர்.

வன்னியில் புனிதபூமி சிறுவர் இல்லத்தில் வளர்ந்து பாடசாலைப் படிப்பையும் முடித்து நிதர்சனத்தில் பணி புரிந்துள்ளார்.

வடபோர்முனை பயிற்சி ஆசிரியராக இருந்து இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்ட செஞ்சுடரின் சகோதரரும் ஆவார்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# நேட்டோ போன்ற அமைப்பை மத்திய கிழக்கில் உருவாக்க முயற்சி



ஈரானுக்கு எதிராக மத்திய கிழக்கில் நேட்டோ போன்ற படைத்துறைக் கூட்டணி ஒன்றை உருவாக்கவேண்டும் என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடந்த புதன் கிழமை(24) அமெரிக்காவின் காங்கிரஸ் சபையில்பேசும்போது தெரிவித்துள்ளார்.

சோவியத்தின்ஆபத்தைஎதிர் கொள்வதற்கு அமெரிக்கா ஐரோப்பாவில் தனது பாதுகாப்பு கூட்டணியை அமைத்திருந்தது. அதே போல அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து பாதுகாப்புக் கூட்டணி ஒன்றை மத்திய கிழக்கில் அமைக்க வேண்டும். அதன் மூலம் ஈரானை முறியடிக்க முடியும்.

அவ்வாறான ஒரு கூட்டணியின் செயற்பாட்டை கடந்த ஏப்பிரல் 14 ஆம் நாள் நாம் கண்டிருந்தோம். ஈரான் இஸ்ரேல் மீது தாக்குதல் மேற்கொண்டபோது இந்த நாடுகளின் கூட்டணி அதனை முறியடித்திருந்தது. கூட்டணி

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் 21 இல் நடைபெறும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு இன்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானியிலேயே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி




ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட கப்பல் விபத்து

## பெருமளவு எண்ணை கடலில் கலந்தது

கடந்த வியாழக்கிழமை(26) பிலிப்பைன்ஸின் தலைநகரிற்கு அண்மையாக உள்ள கடல் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 1.5 மில்லியன் லீற்றர் எரிபொருள் கடலில் கலந்துள்ளதால் சூழல் கடுமையாக பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிலிப்பைன்ஸிற்கு சொந்தமான எம்.ரி றெறா நோவா என்ற என்ற கப்பலே விபத்துக்குள்ளாகியிருந்தது. கப்பலில் இருந்த



16 பணியாளர்கள் மீட்கப்பட்ட போதும், ஒருவர்காணாமல்போயுள்ளார்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# தமிழர் மண்ணில் தொடரும் நில அபகரிப்பு

திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலந்தைக்குளம் பகுதியில் பௌத்த விகாரை அமைப்பதற்காக பொதுமக்களின் காணிகளை அபகரிக்கும் நோக்கத்துடன் துப்பரவு செய்யப்பட்டதால் அப்பகுதியில் பதட்டமான சூழல் உருவாகியுள்ளது.

குச்சவெளி-இலந்தைக்குளம் 5 ஆம் கட்டைப்பகுதியில் இருந்த பௌத்த மதகுரு ஒருவரின் தலை



மையில் பௌத்த விகாரை அமைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அப்பகுதி மக்கள்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# பாலஸ்தீன அமைப்புக்களை ஒருங்கிணைத்தது சீனா



பலஸ்தீன மக்களின் விடுதலைக்காக போராடிவரும் பல அமைப்புக்களை மூன்று நாட்கள் மேற்கொண்ட தீவிர பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் ஒரு அணியில் சீனா இணைத்துள்ளது.

தேசிய ஒருமைப்பாடு என்ற உடன்பாட்டில் ஹமாஸ் மற்றும் பற்றா என்ற பிரதான அமைப்புக்கள் உட்பட 14 இற்கு மேற்பட்ட அமைப்புக்கள் கடந்த செவ்வாய்க்கிழமை(23) கைச்சாத்திட்டுள்ளன. தமக்கிடையிலான வேறுபாடுகாளை கைவிட்டு இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை தடுப்பதற்காக இந்த அமைப்புக்கள் இணைந்துள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளன.

தன்னாட்சி அதிகாரம், தேசிய ஒருமைப்பாடு, காசா போரின் பின்னரான புனர்வாழ்வு போன்ற கோரிக்கைகளை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# காச நோய்க்கான தடுப்பு மருந்து விரைவில் பாவனைக்கு வரவுள்ளது

உலக மக்களை அதிகம் பாதித்துவரும் ரியூபகு ளோஸிஸ் எனப்படும்காசநோய்க்கானதடுப்பு மருந்து அடுத்த ஆண்டு மக்களின் பாவனைக்கு வரவுள்ளதாக ரஸ்யாவின் ஹமலியா ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.



இது தொடர்பில் அதன் தலைவர் அலக்சான்டர் ஜின்ஸ்பேர்க் கடந்த புதன் கிழமை(24) தெரிவித்துள்ளதாவது:

இந்த மருந்தின் பரிசோதனை மூன்றாவது கட்ட பரிசோதனைகளில் வெற்றி பெற்றுள்ளது. மேலதிக பரிசோதனைகள் வெற்றி பெற்றால் இந்த தடுப்பு மருந்து எதிர்வரும் வருடத்தின் நடுப்பகுதியில் பாவனைக்கு வரும்.

இதன் மூலம் எதிர்காலத்தில் இந்த நோயின் தொற்றை தடுக்க முடியும். தற்போது இந்த மருந்தை

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# பிரித்தானியாவில் கறுப்பு யூலை இனப்படுகொலை நினைவு நிகழ்வு

இலங்கையில் இடம்பெற்ற ஜூலை இனப்படுகொலை நினைவுநாள் பிரித்தானியாவில் உள்ள நாடாளுமன்றச் சதுக்கத்தில் தமிழ் மக்கள் ஒன்று கூடி அஞ்சலி நிகழ்வை மேற்கொண்டிருந்தனர்.

கடந்த செவ்வாய்கிழமை(23) அகவணக்கத்துடன் ஆரம்பமாகிய நிகழ்வு எமக்கான நீதி வேண்டும் என்ற கோசங்களை எழுப்பியவாறு இடம்பெற்றது.

ஆவணநிகழ்வுகளை நிழல் படமாக காட்சியகப்படுத்தும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது. வேற்றின



மக்களுக்கு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை தொடர்பான விளக்கக் குறிப்புக்களும் வழங்கப் பட்டிருந்தன. இந்நிகழ்வானது உறுதிமொழி ஏற்புடன் நிறைவுபெற்றது.

## இணக்க, அடிபணிவு, ஒப்படைவு, சரணாகதி

# அரசியலின் விளைவு என்ன?

*24 யூலை 2001 அதிகாலை பதினான்கு கரும்புலிகள் கட்டுநாயக்கா வான் படைத்தளத்தை ஊடறுத்துப் புகுந்தார்கள். பிறகு அங்கு அவர்கள் பதினான்கு பேரும் எழுதியது ஒரு இனத்தின் அடங்காமையை, துணிச்சலை, வீரத்தை.*



ஒரு இனத்தின் ஒட்டு மொத்த சினமாக அங்கிருந்த வான்கலங்கள் மீது மோதி வெடித்தார்கள். முழு உலகமுமே புலிகளைப் பார்த்துப் பிரமித்த நாள் அது.

படைவலுச்சமநிலை புலிகள் பக்கம் திரும்பக் காரணமாக இருந்ததும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புலிகள் மீது மேற்குலகம் வலுக்கட்டாயமாகத் திணிப் பதற்குக் காரணமாக இருந்ததுமான தாக்குதல் என்று வரலாற்றாய்வாளர்களும் இராணுவ வல்லுனர்களும் பதிவு செய்த தாக்குதல் இது.

உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் தாக்குதல் நெறிப்படுத்தப்பட வெறும் பதினான்கு புலிகள் செய்த சாதனை அது. இங்கு நாம் கற்றுகொள்ள வேண்டிய முக்கியமான விடயம் ஒன்று இருக்கிறது.

வெறும் பதினான்கு போராளிகள் அன்று தீவின் படைத்துறை, அரசியல், பொருண்மிய காரணிகளை தீர்மானிக்கும் வல்லமையை தமதாக்கிக் கொண்டார்கள் என்பதே அது.

எனவே எம்மிடம் இருக்கும் போர்க்குணத்தை யும், வீரத்தையும் தொடர்ந்து பேணுவது அவசியம். ஏனென்றால் இன்றைய உலக ஒழுங்கு என்பது பலமுள்ளவன் பக்கம் சாயும் தன்மை கொண்டது மட்டுமல்ல நாம் தொடர்ந்து வீழ்ந்து கிடப்பது எதிரி எம்மை தொடர்ந்து அழிக்க உதவுமே ஒழிய எம்மைத் தற்காக்க உதவாது.

“சிறிய மீனை பெரிய மீன் விழுங்கும்” என்கிறார் சாணக்கியர். “தகுதியுள்ளவை உயிர்வாழும்” என்கிறார் டார்வின். இதையே சிக்மன்ட் ப்ராய்ட் வேறு ஒரு மொழியில் சொல்கிறார்” தற்காப்பு என்பது ஓர் இயற்கையான உணர்வு என்பதுடன் நீடித்த வாழ்க்கைக்கு அது அவசியமுமாகும்”.

அரசு என்ற போர்வையில் பேரழிவு ஆயுதங்களு டன், அதி நவீன விஞ்ஞான- தொழில்நுட்ப – புலனாய்வு வலையமைப்புக்களுடன், நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்புசார் சிந்தனை குழாம்களின் லொபிகளால் சுற்றி வளைக்கப்பட்டு வேட்டையாடப்படும்

தேசிய இனங்களின் போராட்டத்தில் உயிர்க் கொடை (கரும் புலிகள்) என்பது தவிர்க்க முடியாத ஒரு வகிபாகத்தைக் கொண்டது என்பதை ‘நந்திக்கடல்’ அழுத்தமாகவே பதிவு செய்திருக்கிறது.

அதனால்தான் பலவீனமான தேசிய இனங்களின் பலம் மிக்க இந்த அதி மனிதர்களை தத்துவப்படுத்தி மறு அறிமுகம் செய்கிறது ‘நந்திக்கடல்’. நாம் அடிக்கத் தேவையில்லை – ஆனால் எல்லை மீறிப் போனால் ஒரு கட்டத்தில் மீளத் திருப்பி அடிப்போம் என்ற அச்ச உளவியலை எதிரிக்குள் விதைப்பதனூடாகவே நாம் எம்மைத் தற்காத்துக் கொள்ளவும், பேரம் பேசவும் முடியும்.

அதை விடுத்து தற்போது நமது தமிழ் அரசியல் வாதிகள் செய்வது போல் இணக்க, அடிபணிவு, ஒப்படைவு, சரணாகதி அரசியல் செய்தால் இருக்கிற கோவணமும் பறி போய்விடும். யூலை மாதத்தின் குறிப்பாக இன்றைய நாளின் செய்தி இதுதான்.

*நன்றி: பரணி கிருஸ்ணரஜனி*

## அனைத்துலகத்துக்கு ஈழத்தமிழரின் இறைமையினதும் தேசியத்தினதும் வலிமையினை வெளிப்படுத்தும் தளமாகத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும்

சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான 2024ம் ஆண்டுக்கான தேர்தல் செப்டெம்பர் 21 இல் நடைபெறுமென சிறிலங்காவின் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இந்நிலையில் ஈழத்தமிழர்கள் இந்த ஜனாதிபதி தேர்தலை தங்கள் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் உறுதிப்படுத்த எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதே இன்று தாயகத்திலும் புலத்திலும் எழுந்துள்ள கேள்வியாக உள்ளது.

சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை விகிதாசாரப்பிரதிநிதித்துவம் என்னும் இரண்டையும் 1978ம் ஆண்டு சிறிலங்கா அரசியலமைப்பில் அறிமுகம் செய்த இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் அரசியல் குருவும் கிட்டிய குடும்ப உறுப்பினருமான முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்த்தனா, இவற்றைப் பயன்படுத்தியே ஈழத்தமிழர்களின் இறைமையை ஒடுக்கி அவர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பிரிவினையென்றும் அவர்களின் உயிரையும் உடமைகளையும் நாளாந்தவாழ்வையும் சிறிலங்காவின் இனஅழிப்பு அரசியலில் இருந்து பாதுகாக்கும் சனநாயகப் போராட்டங்கள் ஆயுத எதிர்ப்புப் போராட்டங்கள் அனைத்தையும் பயங்கரவாதம் எனவும் அரசியலமைப்பால் வரைவுபடுத்தி 1979ம் ஆண்டு முதல் இன்று வரை 45 ஆண்டுகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தாலும் மக்கள் மேலான யுத்தத்தாலும் ஈழத்தமிழினத்தைத் தேசமாகவே இனஅழிப்பு செய்யும் சிறிலங்காவின் அரசியலையும் 1983ம் ஆண்டின் 6வது அரசியலமைப்புத் திருத்தத்தால் ஈழத்தமிழர்கள் தாங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட இறைமையுடன் தங்கள் வரலாற்றுத் தாயகத்தில் வாழ்வதை மறுத்து அவர்களின் தாயகம் தேசியம் தன்னாட்சி குறித்த எந்த எண்ணத்தையோ சொல்லையோ செயலையோ பிரிவினையென்று தேசத்துரோகக் குற்றமாகவும் சட்ட ஆட்சியையும் உருவாக்கினார்.

இந்நிலையில் இன்று இந்த ஈழத்தமிழர்களை அரசியல் ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் அவர்களின் அரசியல் உரிமைக்கான எந்தச் செயற்பாட்டையும் இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு என்னும் மூவகைப்பட்ட அனைத்துலகக் குற்றச் செயல்களால் தடுத்து நிறுத்திக் கொண்டு அதனைச் சிறிலங்காவின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் தேசிய பாதுகாப்பு நடவடிக்கையென உலகுக்கு நியாயப்படுத்தி வரும் அரசியல் முறைமைக்கான அரசுத் தலைவர் தேர்தலாகத்தான் 2024 சிறிலங்கா ஜனாதிபதி தேர்தலும் வருகிறது. இந்நிலையில் பிராந்திய மேலாண்மையான இந்தியாவும் சிறிலங்காவின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதே தனது முதன்மை நோக்கு என்று முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்களால் ஈழத்தமிழர்களின் பாதுகாப்புக்கு என ஆயுதமும் படைப்பயிற்சியும் இந்தியாவில் அளித்து ஊக்குவிக்கப்பட்ட ஈழத்தமிழர் தேசிய விடுதலைப்போராட்டத்தின் முதன்மை நோக்கான ஈழத்தமிழர்களின் தேசிய பாதுகாப்பு என்பதை உறுதிப்படுத்தும் தனது பொறுப்பை துறந்து 1987 சிறிலங்கா இந்திய உடன்படிக்கையின் பின் இன்று வரை செயற்படும் நிலையில் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் இந்தியாவின் சந்தை மற்றும் கூட்டாண்மை பங்காண்மை தேவைகள் கருதி ஈழத்தமிழரின் தேசியப் பிரச்சினையை சிறிலங்காவின் இறைமைக்குட்பட்ட சமுகம் ஒன்றின் பிரச்சினை என்ற பார்வையில் அனைத்துலகச் சட்டங்களையும் அமைப்புக்களையும் நெறிப்படுத்துவதுடன் சிறிலங்காவுக்கான படைபலத்தை அதிகரிப்பதற்கான எல்லா செயற்பாடுகளையும் நிதி உதவிகளையும் இன்று வரை அளித்து வருகின்றன.

இதனால் இந்தியாவும் அமெரிக்காவும் மேற்குலகநாடுகளும் இன்றைய சிறிலங்காவின் ஜனாதிபதி தேர்தலை சிறிலங்கா அரசாங்கத்தின் உறுதிப்பாட்டைப் பலப்படுத்தும் சனநாயக வழியாகவே வரவேற்று சிறிலங்காவுக்கு அதனுடைய பாதுகாப்பை படைநிலையிலும் பணநிலையிலும் உறுதிப்படுத்த தாங்கள் வகுத்தளித்த அனைத்துலக நாணய நிதியம் உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட்ட அனைத்துலக நிதிக்கட்டமைப்புக்கள் வழி உச்சக்கட்ட உதவிகளை வழங்கி வருகின்ற நிலையில் அதனைத் தாம் விரும்பியவாறு தொடர்ந்தும் முன்னெடுக்கும் சிறிலங்கா அரசுத் தலைவர் இந்த ஜனாதிபதி தேர்தல் மூலம் தெரிவாக வேண்டுமென்று உறுதியாகச் செயற்பட்டு வருகின்றனர். இந்நிலையில் சிறிலங்காவுக்கு அதிக கடன் அளித்துள்ள நாடுகளான சீனாவும் இந்தியாவும் யப்பானும் தங்கள் கடனுதவியை இலங்கைத் தீவின் இயற்கை வளங்களையும் மனித வலுவையும் தங்களுடைய சந்தை மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்கு உச்சமாகப் பயன்படுத்தும் பொருளாதார முறைமைகளை முன்னெடுக்கும் சிறிலங்கா அரசுத் தலைமையைத் தொடர்ந்து பேணும் வகையில் இந்தச் சிறிலங்கா ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்கின்றன.

மக்களால் பாராளுமன்ற உறுப்பினராகக் கூட தேர்ந்தெடுக்கப்படாது 1978ம் ஆண்டு அரசியலமைப்பின் விகிதாசாரப் பிரதிநிதித்துவப் பட்டியல் முறை மூலம் தேசிய பட்டியல் வழியாக நியமனம் பெற்று ஒரே ஒரு உறுப்பினராக மட்டும் இருந்து கொண்டு அதே வேளை முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி கோத்தபாய ராசபக்சாவை அரகலிய மக்கள் போராட்டத்தின் மூலம் சிங்கள மக்கள் வெளியேற்ற எடுத்த நடடிவடிக்கைகளில் மகிந்த-ராசபக்ச குடும்பத்தின் பாதுகாவலராகத் தன்னை முன்னிலைப்படுத்தி அனைத்துலக அனுசரணைகளை ராசபக்ச குடும்பத்துக்கு பெற்றுக் கொடுக்கும் முகவர் ஜனாதிபதியாக 2022 இல் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்கா இரண்டு வருடங்களில் அதனை நிறைவேற்றிய போதிலும் சிங்கள மக்களால் கூட ஏற்றுக்கொள்ளப்படாத தலைவராக எந்தக் கட்சியாலும் தான் மிகநீண்டகாலம் அரசியல் நடாத்திய ஐக்கிய தேசியக் கட்சியாலும் கூடப் புறக்கணிக்கப்பட்ட நிலையில் தனிவிருப்ப வேட்பாளராராக ஜனாதிபதி தேர்தலில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளமை சிங்கள மக்களிடையிலும் தலைமை வெற்றிடம் உள்ளதை உலகுக்கு உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தத் தலைமை வெற்றிடம் வெளிப்பட்டு சிறிலங்காவுடன் கடள் மறு சீரமைப்புச் செய்துள்ள கடன் கொடுத்தவர்கள் அதனை மீளப்பெறுவதற்கு இடையில் மக்கள் ஆணை பெற்ற ஜனாதிபதியொருவரை நியமிக்க வேண்டும் என்ற தேவையே இன்றைய ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு. எவர் ஜனாதிபதியாக வந்தாலும் சிங்கள பௌத்த பேரினவாதத்தை ஒன்றிணைக்கும் பௌத்த மகாசங்கத்தினரின் நெறிப்படுத்தலில் அவர் ஈழத்தமிழின அழிப்பிலும் அனைத்துலக உதவிகளைப் பெறுவதிலும் பொதுத்தன்மையுடன் செயற்படுவார் என்பதால் யார் வந்தாலும் ஏதோ ஒருவகையில் ரணில் விக்கிரமசிங்காவின் அதிகாரக்கட்டமைப்பு மீளவும் உறுதி செய்யப்பட்டு சிறிலங்காவின் வங்குரோத்துப் பொருளாதாரம் அனைத்துலக உதவிகளால் நிலைபெறும் என்பது வெளிப்படையானவொன்று. இதனாலேயே மக்கள் தேசிய முன்னணியின் அநுரகுமர திசநாயக்கா முதன்மை நிலையிலும் தேசிய மக்கள் சத்தியின் சஜித் பிரேமதாசா அடுத்த நிலையிலும் மூன்றாவது நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க உள்ள நிலையிலும் உள்ளனர் என்ற கருத்துக் கணிப்பீடுகளுக்கு மத்தியிலும் ஜனாதிபதி தேர்தல் திட்டமிட்டவாறு நடைபெறுகிறது. சிறீமாவோ பண்டாரநாயக்காவின் இடதுசாரிக் கூட்டணி மிகப் பலம்பொருந்திய நிலையில் 1977 தேர்தல் மூலமே ஜே. ஆர் ஜயவர்த்தனா மீளவும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வந்து சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையைப் பறித்தும் ஈழத்தமிழ் அரசியல் வாதிகளை இந்தியாவுக்கு விரட்டியடித்தும் சிங்கள நாடு பௌத்த சட்டம் சிங்கள ஆட்சி என்ற தத்துவத்தின் மூலம் 12 ஆண்டுகள் ஆட்சி செய்து சிங்கள பௌத்த பேரினவாதத்தையும் மேற்குலகம் சார்ந்த அரசியலையும் மீளவும் உறுதிப்படுத்தியமை இன்று ரணில் விக்கிரமசிங்காவின் இந்தத் தேர்தல் அறிவிப்பை அனுமதித்தமைக்கான முன்னுதாரணமாக உள்ளது. அத்துடன் ரணில் விக்கிரமசிங்கா விடுதலைப்புலிகள் அமைப்பினை பிளவுபடுத்தும் தந்திரோபாயங்களைக் கையாண்டு சிங்களத் தலைமைக்கு மீளவும் வலிமை சேர்த்தது போலவே இன்று ராஜபக்சாக்களின் ஆதரவுடன் பின்பக்கக் கதவால் ஆட்சித்தலைமையை ஏற்று அவர்களுடைய கட்சியையே பிரித்துள்ளார் என்று நாமல் ராஜபக்சா ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இதே தந்திரோபாயத்தைத் தான் இந்தியக் கூட்டாண்மைக்கும் அமெரிக்கப் பங்காண்மைக்கும் சீன நட்பாண்மைக்கும் ரஸ்ய மத்திய கிழக்கு நாடுகள் உறவாண்மைகளுக்கும் எல்லாநாடுகளின் சிறிலங்காவுடனான தொடர்பாண்மைக்கும்; ஈழத்தமிழரின் தாயகத்தைச் சூழவுள்ள இந்துமாக்கடல் பகுதியிலும் நிலப்பகுதியிலும் ரணில் கையாண்டு நில இணைப்பு பொருளாதார இணைப்பு மீண்டெழு எரிசக்திகளின் இணைப்பு காலநிலைப் பாதுகாப்பு இணைப்பு எனப் பலவழிகளில் அனைத்துலக தளமாக இலங்கைத் தீவை மாற்றி அந்த அந்த நாடுகளின் மூலமான நன்மைகளைப் பெற்று ஈழத்தமிழர் மேலான மக்கள் மேலான யுத்தத்தை 1972 முதல் அரைநூற்றாண்டுக்கு மேலாக நடாத்தி ஏற்படுத்திய படுகடன்களால் ஏற்பட்ட வங்குரோத்து அரசியலில் இருந்து தப்பிக்கும் தற்காலிக பொருளாதாரச் செயற்பாட்டில் வெற்றி கண்டுள்ளார் என்பதே ரணிலின் அனைத்துலக அரசியல் குறித்த மதிப்பீடாக உள்ளது.

இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தமது தாயகம் மேலான இறைமையின் உண்மையையும், தேசிய வலிமை பிராந்திய உலகப் பாதுகாப்புக்குக்கான அடிப்படைத் தேவையென்பதையும் தன்னாட்சி மூலமே அவர்களால் பிராந்திய உலக அமைதிக்கான பங்களிப்பைச் செய்ய இயலும் என்பதையும் இந்தத் தேர்தல் மேடையைப் பயன்படுத்தி பிராந்திய, உலகுக்கு தெளிவுபடுத்துவதே இந்தத் தேர்தலை ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் முறைமையாக வேண்டும் என்பதே இலக்கின் எண்ணம்.

**ஆசிரியர்**



# மொட்டுவை பிளவுபடுத்திய ரணில்



# குழம்பிப்போயுள்ள ராஜபக்ஷக்கள்!

அகிலன்

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தலை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்ட உடனடியாகவே முதல் ஆளாக ரணில் விக்கிரமசிங்க தான் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை செலுத்தியிருக்கின்றார். கட்சி சார்பின்றி சுயாதீன வேட்பாளராகவே அவர் போட்டியிடுகின்றார். இதன் மூலமாக ரணில் வெளிப்படுத்திய செய்திகள் முக்கியமானவை!

பொது ஜன பெரமுனவின் சார்பில்கள மிறங்கினால் மட்டுமே அவருக்கு ஆதரவளிக்க முடியும்என ராஜபக்ஷக்கள் அழுத்தம் கொடுத்து வந்த நிலையில், அதனையிட்டுதான் கவலைப் படப்போவதில்லை என்பதை இதன் மூலம் ரணில் தெளிவாக உணர்த்தியிருக்கின்றார்.



ரணிலின் இந்த நகர்வு மொட்டு அணிக்குத்தான் அதிகளவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது. ரணிலை ஆதரிப்பதா அல்லது தனியான வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதா என்பதையிட்டு ஆராய வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனைத் தீர்மானிக்க மொட்டுக் கட்சி திங்கட்கிழமை கூடவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் அதிகளவுக்குக் குழம்பிப்போயுள்ள-அல்லது பிளவுபட்டுப்போயுள்ள அணியாக இன்று மொட்டுக் கட்சிதான் உள்ளது.

நாடாளுமன்றத்தில் அதிக உறுப்பினர்களைக் கொண்டுள்ள கட்சியாக மொட்டுத்தான் உள்ளது. 225 உறுப்பினர்களில் 145 உறுப்பினர்கள் மொட்டு அணியைச் சேர்ந்தவர்கள். அவர்களை ஏதோ ஒருவகையில் அரவணைத்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ரணிலுக்கு இருந்ததற்கு அதுதான் காரணம். ஐக்கிய தேசியக் கட்சி சிதைந்துபோய், நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு உறுப்பினரைக் கொண்டுள்ள நிலையில், தனது திட்டங்களை நிறைவேற்ற நாடாளுமன்ற பலத்தைக் கொண்டுள்ள மொட்டுவை நம்பியிருக்க வேண்டியவராக ரணில் இருந்தார்.

இதனைவிட, ரணிலின் கட்சியான ஐ.தே.க. சிதைவடைந்து அதன் கட்டமைப்புக்களும் செலிழந்துபோயிருப்பதால், தேர்தல் காலத்தில் களத்தில் செயற்படுவதற்கும் மொட்டுவின் தேவை ரணிலுக்கு இருந்தது.

மறுபுறத்தில் ராஜபக்ஷக்கள் விரும்புவது போல மொட்டுவுடன் உத்தியோகப்பூர்வமாக ஒரு உடன்படிக்கைக்குச் செல்வதற்கோ அக்கட்சியின் சார்பில் போட்டியிடவோ ரணில் விரும்பவில்லை. அதற்குகாரணம்இருந்தது. இரண்டுவருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற அரகல என்ற மக்கள் கிளர்ச்சி ராஜபக்ஷக்களை அம்பலப்படுத்தியிருந்தது. ராஜபக்ஷக்கள்தான் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் என்று பெரும்பாலான சிங்கள மக்களும் நம்புகின்றார்கள். நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றும் அதனை வெளிப்படுத்தியது.

இந்த நிலையில் ராஜபக்ஷக்களுடன் செல்வதில் ரணிலுக்கு இரண்டு பிரச்சினைகள் இருந்தன. ஒன்று ஊழல்வாதிகளுடன் ரணில் இணைந்துள்ளார் என்ற பிரசாரத்தை சஜித்தும், அநுரகுமாரவும் முன்னெடுப்பார்கள்.

இரண்டாவது, ராஜபக்ஷக்களுடன் கூட்டடை வைத்துக்கொண்டு தமிழ் வாக்குகளைக் கேட்க முடியாது. சிறுபான்மையினர் அவ்வாறான கூட்டுக்கு வாக்களிக்க மாட்டார்கள். கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் ராஜபக்ஷக்களுக்கு எதிராகவே சிறுபான்மையின மக்கள் வக்களித்திருந்தார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

நாடாளுமன்றத்தில் தற்போது 145 உறுப்பினர்கள் இருந்தாலும், அடுத்து வரக்கூடிய ஒரு தேர்தலில் அந்த ஆதரவைத் தக்கவைத்துக்கொள்ள முடியாது என்பதும் ராஜபக்ஷக்களுக்கும் தெரியும். ஆனால், 145 ஐ வைத்துக்கொண்டு ரணிலுக்கு அழுத்தம் கொடுத்து தமது இருப்பைப் பாதுகாத்துக்கொள்வதுதான் அவர்களுடைய உபாயமாக இருந்தது. அதனைவிட, ரணிலின் சொந்தக் கட்சி பலவீனமானதாக இருப்பதால் களத்தில் பணியாற்ற தமது கட்சியின் தயவை ரணில் எப்படியும் நாடுவார் என்றும் ராஜபக்ஷக்கள் எதிர்பார்த்தார்கள்.

ராஜபக்ஷக்களுக்கு இரண்டு பிரச்சினைகள் இருந்தன. முதலாவது, தம்மைப் பாதுகாத்துக் கொள்வது. இரண்டாவது, கட்சியைப் பாதுகாத்துக் கொள்வது. இந்த விடயத்தில் மகிந்த ராஜபக்ஷ கட்சியைப் பாதுகாப்பதைவிட குடும்பத்தின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதிலேயே கவனமாக இருந்தார். இப்போதும் இருக்கின்றார். அதனால், மீண்டும் ரணில் வருவதையும், ரணிலுக்கு நெருக்கடி கொடுக்கக் கூடாது என்பதும் அவரது நிலைப்பாடாக இருந்தது. சஜித் அல்லது அநுரா வந்தால் தமது குடும்பத்தினரின் பாதுகாப்பு எதிர்காலத்தில் கேள்விக்குறியாகலாம் என்பது மகிந்தவின் கருத்து. மீண்டும் கோட், கேஸ் என்று அவர்கள் தம்மை அலை வைக்கலாம் என்ற அச்சம் அவருக்குள்ளது.

ஆனால், இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் பசில், நாமல் போன்றவர்கள் ரணிலிடம் அதிகளவுக்கு எதிர்பார்த்தார்கள். கடினமான நிபந்தனைகளை முன்வைத்தார்கள். பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் இதற்காக இடம்பெற்றன. ரணில் எதற்கும் இணங்கவில்லை. இறுதியாக கடந்த வாரம் ரணிலைச் சந்தித்த மகிந்த, பசில், நாமல் ஆகிய மூவரும் தமது ஆதரவு தேவையானால் பிரதமர் பதவி தமக்குத் தரப்பட வேண்டும் என்ற புதிய நிபந்தனையை விதித்தார்கள். நாமல் ராஜபக்ஷ அந்தப் பதவிக்குத் தயாராக இருந்தார்.

அதாவது, மொட்டுவின் வேட்பாளராக ரணில் களமிறங்க வேண்டும், அவ்வாறில்லாமல் தனியாகக் களமிறங்குவதானால், பிரதமர் பதவியைத் தந்தால் மட்டுமே தாம் ஆதரவளிக்கத் தயார் என்பதுதான் அவர்களது நிலைப்பாடு. இதற்கு உறுதியான பதில் எதனையும் ரணில் கொடுக்கவில்லை. பதிலாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்ற செய்திகள் கசியவிடப்பட்டன.

ரணிலைப் பொறுத்தவரையில் ராஜபக்ஷக்கள் யாரையும் உத்தியோகபூர்வமாக தேர்தல் களத்தில் இறக்காமல் அமைதியாக இருக்க வேண்டும் என்பதையே எதிர்பார்த்தார். மொட்டு இணங்கிவராவிட்டால், நிலைமைகளை எவ்வாறு கையாள்வது என்பதற்கு மாற்றும் திட்டம் ஒன்றும்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# சிங்கள வேட்பாளர்களுடன் பேசி முடிவு எடுக்கலாமா?

**நடைபெறப்போகும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை களம் இறக்குவது குறித்த உடன்படிக்கை கடந்த திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது. தமிழ் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளும் ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரதிநிதிகளும் இதில் கையொப்பமிட்டுள்ளனர். இதில் கையொப்பமிட்டுள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளில் ஒருவரான தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் வடமாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான ஐங்கரநேசன் அவர்கள் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



**வரலாற்றில் முதல் முறையாக இவ்வாறான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் சிவில் அமைப்புக்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கை ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது?**

ஜனாதிபதித் தேர்தலில் குமார் பொன்னம்பலம், சிவாஜிலிங்கம் ஆகியோர் போட்டியிட்டிருந்தாலும் கூட, தற்சமயம் தமிழ்த் தேசியக் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்து முன்னெடுக்கும் இந்த முயற்சி வரலாற்றில் பதியப்படும் ஒன்றாகத்தான் இருக்கும். முன்னையவர்கள் தனிநபர்களாக தமது விருப்பின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிட்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுது பொது வேட்பாளர்என்கிறகருதுகோளானதுஒட்டுமொத்த தமிழ் மக்களின் சார்பிலும், சிவில் சமூகங்களின் சார்பிலும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஏழு தமிழ்க் கட்சிகள் இதில் இணைந்திருக்கின்றன.

கடந்த காலங்களில் ஜனாதிபதி வேட்பாளர்களுடன் தமிழ் அரசியல் தலைவர்கள் பேசுவார்கள். அவர்கள் தாங்கள் எல்லாம் செய்வோம் என்ற வாக்குறுதியைக் கொடுப்பார்கள். ஆனால், அவை எதுவும் நடைமுறையில் சாத்தியமில்லாமல் ஏமாற்றப்படுவதாகவே அமைந்திருக்கின்றது.

போரை முன்னெடுத்த சரத் பொன்சேகாவை 2010 ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்கள் ஆதரித்திருந்தார்கள். சரத் பொன் சேகாவை ஆதரிப்பதென அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்த போது, அதிலிருந்த பலர் அதனை எதிர்த்தார்கள். ஆனால், சம்பந்தன் அதில் உறுதியாக இருந்ததால், இறுதியில் அதனை அனைவரும் ஏற்றார்கள். ஆனால், இராணுவத்தின் மீது தமிழ் மக்களுக்கு அதிருப்தி இருந்திருக்குமாக இருந்திருந்தால் அவர்கள் என்னை ஆதரித்திருப்பார்களா என்ற கேள்வியை அண்மையில் சரத் பொன்சேகா எழுப்பியிருந்தார். அதனால், அப்போது நாம் எடுத்த முடிவு முட்டாள்தனமானது என்பதைத்தான் உணர்த்துகின்றது.

தமிழ் தேசியக் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் இணைந்து அமைத்துள்ள பொதுக் கட்டமைப்புக்குள் வராத கட்சிகள் சிலவும் உள்ளன. சில கட்சிகள் பகிஷ்கரிப்பு எனக்கூறுகின்றன. இன்னொரு சாரார் வேட்பாளர்களுடன் பேசி முடிவெடுக்க வேண்டும் என்றும் சொல்கின்றார்கள். ஆனால், கடந்த காலங்களில் வேட்பாளர்களுடன் பேசித்தான் முடிவெடுக்கப்பட்டது. சிங்களப் பேரினவாதம் என்பது எப்போதும் தம்மைப் பயன்படுத்தி தமது நலன்களுக்காக எதனையாவது செய்திருக்கின்றார்களே தவிர, எமது நலன்களுக்காக எதனையும் செய்யவில்லை.

இதனால்தான் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் மூலம் எங்களுடைய அரசியல் அபிலாஷைகளை நாம் உரத்து வெளியே சொல்லக்கூடியதாக இருக்கும். தமிழ்க் கட்சிகளை தேசியத்திலிருந்து விலகிச் செல்லாமல் இணைகக்கூடியதாக இருக்கும். இதனைவிட இளைய தலைமுறை புதிய வாக்காளர்களை தமிழ்த் தேசியத்தின்பால் வைத்திருக்கவும் இந்த தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது உதவும்.

**இப்போது ஏற்பட்டிருக்கும் இந்த உடன்படிக்கை, எதிர்காலத்திலும் தொடருமா?**

தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது கட்சி அரசியலுக்கு அப்பால் ஒரு பொதுவான வேலைத்திட்டம் என்ற அடிப்படையில்தான் நாங்கள் இதில் இணைந்திருக்கின்றோம். இந்தக் கதவுகள் திறந்திருக்கின்றன. ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளும் இதில் இணைய வேண்டும் என்றுதான் தமிழ் சிவில் அமைப்புக்கள் அழைப்பு விடுத்திருந்தது. ஆக, இந்த ஒற்றுமை என்பது தேர்தல் அரசியலை மையப்படுத்தியதாக இருக்காது, தமிழ்த் தேசியக் கட்சிகளின் தனித்தனி அரசியல் அபிலாஷைகளுக்கு அப்பால் இனத்தின் அபிலாஷைகளை முன்னெடுக்கின்ற பட்சத்தில் தொடர்ந்தும் பயணிக்கும் என்றுதான் நான் கருதுகிறேன்.

**பொது வேட்பாளர் என்ற விடயத்துக்கு தமிழ் மக்களுடைய ஆதரவு எப்படி இருக்கும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்? அந்த ஆதரவைப் பெறுவதற்காக எவ்வாறான பிரசார உத்திகளைக் கையாளப்போகின்றீர்கள்?**

இது தொடர்பில் பலருடனும் நான் உரையாடியிருக்கிறேன். பலரதும் கேள்வி, தமிழரசுக் கட்சி எதற்காக வெளியில் நிற்கிறது? தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இதில் ஏன் இணையவில்லை என்ற கேள்வி இருந்ததே தவிர, பொது வேட்பாளர் என்ற கருத்துடன் அவர்கள் யாரும் முரண்படவில்லை. அனைத்து தமிழ்க் கட்சிகளும் இணைந்திருந்தால் நன்றாக இருந்திருககும் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றதே தவிர, இது தவறானது என்று யாரும் சொல்லவில்லை.

ஆனால், இதில் துாரதிஷ்டம் என்னவென்றால், பொது வேட்பாளருக்கு எதிராகத் தாம் செயற்படப்போவதாக தமிழ்த் தேசியத்தின் பெயரில் செயற்படும் சிலர் கூட தெரிவித்திருக்கின்றார்கள். இதனால் நாம் இரண்டு முனைத் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஜனாதிபதியாக யார் வந்தால் தமக்கு அதிக வாய்ப்புள்ளது என்பதற்காக நல்லரசுகளும் இதற்கான காய் நகர்த்தல்களை மேற்கொண்டுவருகின்றார்கள். அவர்களுக்கு தமக்கு சார்பாகச் செயற்படக்கூடிய ஒருவர் அந்தக் கதிரையில் அமரவேண்டும். அதற்கு ஏற்றவாறு மக்களிடம் கருத்துருவாக்கம் மேற்கொள்ளப்படும்.

ரணில் விக்கிரமசிங்க பொருளாதார மீட்கராக இன்று சித்தரிக்கப்படுகின்றார். அமெரிக்க இராஜதந்திரிகள் இங்கு வரும்போதெல்லாம் அதனைச் சொல்கின்றார்கள். அதனால் அவர்களுடைய விரும்பம் எது என்பது அதன் மூலம் வெளிப்படுகின்றது. ஆக, பொது வேட்பாளர் ஒருவரை நாம் களமிறக்கும் போது தமது விருப்பங்களுக்குத் தடையாக நாம் இருப்பதாக அவர்கள் கருதுவார்கள். அதையும் நாம் வென்றாக வேண்டும்.

அதேவேளையில், தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று சொல்கின்ற கட்சிகளிடையேயும் வெளிப்படையாக இதனை எதிர்ப்பவர்கள் இருக்கின்றார்கள்.அவர்களையும் நாங்கள் வெல்ல வேண்டும். அதனால் மக்களிடையே இதனை ஒரு பாரிய பணியாக இதனை நாம் கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறு கொண்டு வென்றால் இது வெற்றியளிக்கும்.

இதனை முன்னெடுப்பதற்கான உப குழுக்களை உருவாக்குவதற்கான சந்திப்பு ஒன்றை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாம் நடத்தவுள்ளோம். இதில் பொது வேட்பாளரைத் தீர்மானிப்பதற்கான ஒரு குழு, நிதியைத் தீர்மானிப்பதற்கான ஒரு குழு, பரப்புரைகளை மேற்கொள்ளுதல், மக்களிடம் இதனை எவ்வாறு கொண்டு செல்வது போன்ற விடயங்களுக்கு தனித்தனிக் குழுக்களை உருவாக்குவதற்காக இருக்கிறோம்.

**கடந்த தேர்தல்களுடன் பார்க்கும் போது இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சிங்கள வேட்பாளர்கள் அனைவருமே, இனநெருக்கடிக்கான தமது தீர்வு என்ன என்பதைத் திட்டவட்டமாக அறிவித்து வருகின்றார்கள். பொது வேட்பாளர் என்ற கருத்தை இது பாதிக்குமா?**

இல்லை. காரணம், இந்த வேட்பாளர்கள்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# வேலையில்லாப் பட்டதாரிகளின் தொடரும் போராட்டம்

**ஹஸ்பர் ஏ. ஹலீம்**

நாட்டின் பொருளாதார நெருக்கடி ஒரு பக்கம் இருக்க இலங்கையில் வேலையில்லா பட்டதாரிகளின் நிலைமை ஒரு பக்கம் அரசாங்கத்துக்கு சவாலாக உள்ளது. இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள வேலையில்லா பட்டதாரிகள் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.




தற்போது ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியும் இலங்கையில் தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இன்னும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவுள்ளனர்.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் இருந்து தங்களது பட்டப்படிப்புக்களை முடித்து விட்டு அரச துறையில்தொழில்களைளஎதிர்பார்த்துகாத்திருக்கும் இந்த பட்டதாரிகளுக்கு இதுவரையில் எந்த ஒரு வேலைவாய்ப்புக்களும் கிடைக்காத காரணத்தினால் அவர்கள் பல்வேறுபட்ட வீதி போராட்டங்கள் மற்றும் தொடர் போராட்டங்கள் ஊடாக தமக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தும் வருகின்றனர்.



ஆனால் தற்போதைய அரசாங்கம் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கான அரச துறையில் நியமனங்கள் வழங்குவது தொடர்பில் பெருமளவில் கரிசனை காட்டவில்லை என்பது புலனாகிறது.

அத்துடன் அரச பல்கலைக்கழகங்களில் பட்டங்களை முடித்தும் வீட்டில் பலர் தனியார் துறையை விரும்பாத நிலையில் முடங்கிக் கிடக்கின்றனர். அதிலும் ஆண்களை விட பெண்களின் தொழிலற்ற வீதம் அதிகரித்து காணப்படுகிறது.

அண்மையில் வேலையில்லாப் பட்டதாரிகள்சங்கம் ஊடாக மட்டக்களப்பு காந்திபூங்காவுக்கு முன்னால் 19 நாட்கள் தொடர்போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் ஒரு நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்புக்கு விஜயம் செய்த வேளை, வேலையில்லாப் பட்டதாரிகள் வீதி ஊர்வலமாக சென்று மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இது தவிர திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வேலையில்லாப் பட்டதாரிகள், கிண்ணியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் மூலம் அரசாங்கத்திடம் தங்களுக்கு நியமனங்களை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

அரசியல்வாதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக கோரிக்கை விடுத்த போதிலும் சரியான முடிவுகள் கிடைக்கவில்லை எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

கோட்டாபய அரசாங்கம் ஆட்சியில் உள்ள போது 2019ல் அரச நியமனங்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்களை வழங்கியிருந்த போதிலும் அதன் பின்னர் அரச துறையில் தற்போதைய அரசாங்கம் வேலையில்லா பட்டதாரிகளுக்கான நியமனங்களை வழங்கவில்லை. இதனால் கடந்த ஐந்து வருடங்களில் சுமார் 50ஆயிரம் பட்டதாரிகள் நாடு தழுவிய ரீதியில் தொழில் இன்றி உள்ளார்கள்.




தொழில்வாண்மையான பட்டதாரிகள் வைத்தியத் துறை, பொறியியல் துறையில் பல நியமனங்கள் வழங்கப்பட்ட போதிலும் கலைத் துறை சமூக விஞ்ஞான பட்டதாரிகள் அரச துறையில் வேலைவாய்ப்பு பெறுவது கடினம். ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சைகளுக்கு கலை துறையில் குறிப்பிட்ட சிலரே தெரிவாகின்ற போதிலும் மிகுதி பட்டதாரிகள் தொழில் இன்றி காணப்படுவதுடன் அரச துறை நியமனங்களை நம்பி 45 வயதை தாண்டிய நிலையில் கிழக்கு மாகாணத்தில் மாத்திரமல்ல ஏனைய மாவட்டங்களிலும் உள்ளார்கள்.



அரச சேவை மக்களுக்கு வினைத்திறனுடன் வழங்க வேண்டும் என்ற அரச கொள்கை காணப்பட்டாலும் பல்கலைக்கழக உள்வாரி வெளிவாரியான பட்டங்களை கற்று திறம்பட வெளியேறிய போதிலும் நியமனங்களை பெறுவது தற்போதைய சூழ்நிலையில் எட்டாக்கனியாகவே காணப்படுகிறது. அரசாங்கம் தேர்தலை இலக்காகக் கொண்டு பல திட்டங்களை செய்து வாக்குகளுக்காகத் திசை திருப்ப பல உத்திகளைக் கையாளுகின்ற போதிலும் வேலையில்லாப் பட்டதாரிகளை கவனத்திற் கொள்ளவில்லை. இதனால் சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் மிக மோசமாக பாரிய பின்னடைவுக்குள் தள்ளிவிடுகிறது.



தற்போதைய அரசாங்கத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்க ஊழியர்களும் பல்வேறு துன்பங்களை அனுபவிக்கிறார்கள். பலருக்கு மாதாந்த சம்பளம் பெற்றாலும் அதற்கு மேல் செலவு கடன் என உளரீதியாக சிந்திக்க தூண்டுவதுடன் சமூக பொருளாதார தாக்கங்களையும் ஏற்படுத்துகிறது.

திருகோணமலை மாவட்ட பட்டதாரிகள் அண்மையில் ஊடக சந்திப்பொன்றில் இவ்வாறு தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

"எங்களது வேலையில்லாப் பிரச்சினையை அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் செவிமடுக்க வேண்டும்" இது தொடர்பில் பாராளுமன்றத்தில் பேசுவதற்காக ஊர் பாராளுமன்ற உறுப்பினர்களையும் நாங்கள் நாடி உள்ளோம்.

இந்த அரசாங்கம் மிக விரைவில் எங்களது வேலையில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்தப் பிரச்சினையை சரியான முறையில் தீர்க்காவிடின் வீதிக்கு இறங்கிப் போராடுவோம். 900-க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் எந்தவிதமான வேலையும் இல்லாமல் எங்களது மாவட்டத்தில் இருக்கிறார்கள்



நாம் வயது மூப்பை அடைந்து கொண்டிருக்கின்றோம். எங்களுக்கு சரியான வேலையை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம். 35 வயதுக்கு பிறகு நிறுவனங்களிலும் வேலை கிடைப்பது மிகவும் கடினமாகும்..

உள்வாரி வெளிவாரி வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் என எவ்வித பாகுபாடும் இன்றி எங்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெற்று தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

இலங்கை, பெண்ணுரிமை பெண்களுக்கான பாதுகாப்பு என சகலதையும் வழங்கக்கூடிய ஒரு நாடு. அப்படியாக இருந்தும் எங்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்கு கால

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இருப்பை உறுதிப்படுத்தும் மக்களின் வழிபாட்டு முறைகள் ...

து.கௌரீஸ்வரன்

வடக்கு கிழக்கில் தமிழர்களின் இருப்பு என்பது அவர்களின் பண்பாட்டு விழுமியங்கள்,வரலாறுகளில் தங்கிஜ்யுள்ளது. தமது பண்பாடுகளையும் வரலாறுகளையும் தமிழ் மக்கள் பாதுகாக்கத் தவறினால் அவர்களின் இருப்பு என்பது கேள்விக்குறியாகவே மாறிவிடும் நிலையுருவாகும்.



கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் சமய சடங்குகளும் வரலாறுகளும் பின்னிப்பிணைந்ததாகவேயிருக்கின்றது. சமயத்தினை புறந்தள்ளி வரலாறுகளை முன்நகர்த்தமுடியாது. அவ்வாறு முன்நகர்த்தப்படுமானால் அந்த வரலாறு நிராகரிக்கப்படும் வரலாறுகளாகவே காணப்படும்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் பண்பாடுகளும் அவர்கள் கடைப்பிடிக்கும் வாழ்வியல் முறைகளும்தான் கிழக்கில் தமிழர்களின் நீண்டகால வரலாற்றினையும் இருப்பினையும் வெளிப்படுத்துகின்றது. கிழக்கில் இன்றும் காணப்படும் பழங்குடி மக்கள் தமது பண்பாடுகளையும் கலாசாரங்களையும் நவீன யுகத்திற்கும் மத்தியில் பேணி பாதுகாக்கும் நிலைமையினைக் காண முடிகின்றது.

கிழக்கிலங்கையின் குறிப்பாக மட்டக்களப்பின் பழங்குடி மக்களைச் சாராத தமிழ்ப் பண்பாடுகளில் மாரியம்மன் சடங்கு மிகவும் முக்கியத்துவம் கொண்டதாகக் காணப்படுகின்றது. மட்டக்களப்புத் தமிழ்ப் பண்பாடுகளின் தனித்துவங்களை விளங்கிக் கொள்வதற்கு மாரியம்மன் சடங்குப் பண்பாடுகளைப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.



மாரியம்மன் சடங்குப் பண்பாட்டைப் பற்றிய கவனிப்பு அற்ற பார்வை மட்டக்களப்பின் பண்பாட்டைச் சரியாக விளங்கிக் கொள்ளாத அரைகுறைப் பார்வையென்றே கூறலாம். ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்று மட்டக்களப்பின் பண்பாடுகளில் கண்ணகியம்மன் சடங்கும் மாரியம்மன் சடங்கும் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றன.வைகாசி எப்படிக் கண்ணகிக்கு முக்கியமோ அதுபோல ஆனிப் பூரணை மட்டக்களப்பில் மாரியம்மனுக்குரியதாகச் சிறப்புற்று வருகிறது.

மிகப்பெரும்பாலும் மட்டக்களப்பில் உள்ள ஊர்கள் அனைத்திலும் மாரியம்மன் சடங்கு வருடாந்தம் நடைபெற்று வருகின்றது. மட்டக்களப்பில் ஆனி மாதத்தில் பூரணையினை நிறைவு நாளாகக் கொண்டு ஊர்கள் தோறும் மாரியம்மன் சடங்கு நடைபெற்று வருவதனைக் காணலாம்.

மட்டக்களப்பில் மாரியம்மனுக்கான சடங்கை ஒவ்வொரு சமூகத்தவரும் ஊரவரும் தத்தமது வரலாறு பண்பாடு என்பவற்றிற்கேற்ப சிறு சிறு வித்தியாசங்களுடன் தனித்துவமாகவும் அதேநேரம் மாரியம்மன் பத்தி எனும் பொது விதிகளுக்குட்பட்டும் வடிவமைத்து முன்னெடுத்து வருவதனை உய்த்தறிய முடிகிறது.

மேற்கைரோப்பியரின் காலனித்துவக் காலத்தில் உள்ளூர்க் கோவில்களில் சமூகத்தவரும் ஊரவரும் ஒன்றுகூடி மாரியம்மனுக்குச் சடங்கு செய்ய முடியாத நிலைமை உருவான போது ஊர்களில் சிலருடைய வீடுகளில் இரகசியமாக மாரியம்மனுக்கும் கன்னிமாருக்கும் சடங்கு செய்து மட்டக்களப்பார் மாரியம்மன் சடங்கைத் தற்காத்து வந்துள்ளார்கள். இதன் தொடர்ச்சி இன்றும் ஆங்காங்கே சில வீடுகளில் நடந்தேறி வருகின்றது.



வைகாசியில் நடைபெறும் கண்ணகியம்மன் சடங்கிற்குள்ளும் மாரியம்மன் முக்கியத்துவம் பெற்றிருப்பதைக் காணலாம். உதாரணமாக மட்டக்களப்பின் கோராவெளி, மட்டுநகரையண்டிய கண்ணகி கோவில்களில் நடைபெறும் சடங்குகளை உற்று நோக்கும் போது இதனை அவதானிக்க முடிகின்றது. அதாவது கலை யேறித் தெய்வமாடிச் சடங்கு நடைபெறும் கண்ணகி வழிபாட்டில் மாரியம்மன் மிகுந்த முக்கியத்துவமுடையவராக விளங்கி வருகிறார்.

இதேபோல் ஆண்தெய்வங்களின் பெயரில் உள்ள மட்டக்களப்பின் பத்திச் சடங்குக் கோவில்களிலும் சடங்கின் ஆதார சக்தியாக மாரியே காணப்படுகிறார். வளத்தின் தெய்வமான மாரியம்மன் இல்லாமல் மட்டக்களப்பின் பத்திச் சடங்கே இல்லை என்று கூறலாம். மட்டக்களப்பின் பத்திச் சடங்குகளை ஆழமாக அவதானிக்கும் போது இவற்றினை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

மட்டக்களப்பின் பத்திச் சடங்குகளையும் அவற்றின் பண்பாடுகளையும் நாடக ஆற்றுகைக் கோட்பாடுகளின் புரிதலுடன் மட்டும் நின்று கொண்டு உற்று நோக்காமல் வரலாறு, தத்துவம், பண்பாடு, நம்பிக்கை, மரபுரிமைகள், சூழலியல், உளவியல், பால்நிலை, நிறுவன சமயங்களின் தாக்கம், காலனியநீக்கம் என்ற இன்னோரன்ன பல்வேறு கோட்பாடுகள், சிந்தனைகள் முதலானவற்றின் புரிந்து கொள்ளலுடன் தொடர்ச்சியாக அவதானிக்கும் போதும், சடங்குகளிலிருந்து நம்மை அந்நியப்படுத்தாமல் அவற்றுடன் நெருக்கமான ஊடாட்டத்தினை மேற்கொண்டவாறு தொடர்ச்சியாக இயங்கி அனுபவங்களைப் பெறுவதன் மூலமாகவும் பத்திச் சடங்குகளைப் பற்றிப் பல்வேறு பரிமாணங்களில் புரிந்து கொள்ளவும் அதற்றின் நிறை குறைகளைக் காணவும் முடியும்.

இதனூடாக சமகாலத்தின் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் சடங்குகளைத் தகவமைப்பதற்குமான ஆய்வறிவு அனுபவங்கள் நமக்கு வாய்க்கப்பெறும்.

இதேபோன்று வட இலங்கையிலிருந்து தமிழர் சமுதாயத்தின் பல பிரிவினர் பல் வேறு தேவைகளுடன் கடல் வழியாகக் கிழக்கிலங்கையின் கரையோரப் பகுதிகளை நோக்கி வந்து குடியேற்றங்களை உருவாக்கிய வரலாற்றுக் கால கட்டங்கள் இருந்துள்ளமைக்கான சான்றுகளாக சில ஆலயங்களும் உள்ளன..



நரசிங்கத்தைக் குலதெய்வமாக வழிபட்ட நம்பிகுலத்தவர் சிலர் வட இலங்கையின் பல ஊர்களில் வாழ்ந்து பின்னர் கடல் மார்க்கமாக மட்டக்களப்பிற்கு வந்து மட்டக்களப்பின் பண்டைய துறைமுக நகரான சூரியத்துறையினை (தற்போது திருப்பெருந்துறை என்று கூறப்படும் இடம்) அடுத்துள்ள விடத்தல்முனை எனும் இடத்தில் சில காலம் வாழ்ந்து பின்னர் அங்கிருந்து ஏற்கெனவே தமது சமூகத்தவர் வாழும் கோட்டைமுனை (பொதுச்சந்தைக்கருகிலுள்ள அரசடிப்பிள்ளையார் வீதி) எனும் இடத்திற்குக் குடிபெயர்ந்து இறுதியாக நரசிங்கவயிரவரின் வேண்டுகோளின்படி தற்போது கோயிலுள்ள எல்லை வீதியில் நரசிங்க வயிரவருக்கு நிலையான கோயிலமைத்த நீண்டதொரு வரலாற்றை இக்கோயிலின் கதை எடுத்தியம்பி நிற்கின்றது.



அதாவது நரசிங்கவயிரவரை வழிபட்ட ஆதிக் கப்புகனான கந்தன்கதிராமன் அல்லது மொட்டையாச்சி என்பவரும் அவருடைய நெருங்கிய உறவினரும் நரசிங்க வயிரவரின் அடையாளத்துடன் கடல் மார்க்கமாக வட இலங்கையிலிருந்து மட்டக்களப்பின் விடத்தல்முனை வரை வந்து அங்கு நரசிங்க வயிரவருக்குச்சிறு கோயிலமைத்துச் சிறிது காலம் அங்கு வாழ்ந்து பின்னர் தமது உறவினர்கள் வாழ்ந்துவந்த கோட்டைமுனைக்கு இடம்பெயர்ந்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

ஏற்கெனவே மட்டக்களப்பில் வாழ்ந்த நம்பிகுல மக்கள் வழிபட்டு வந்த மட்டக்களப்பிற்கேயுரிய மடாலயத்தை மையமாகக் கொண்ட மாரியம்மன் வழிபாடும் அதற்கேயான பத்தி முறைமைகளும் நரசிங்க வயிரவருடன் இணைந்த வகையில் கட்டுருவாக்கம் பெற்றுள்ளன.

சடங்கு வழிபாட்டில் பின்பற்றப்படும் ஒவ்வொரு காரியத்திற்கும் அதற்கேயான காரணங்கள் தெளிவாக இருந்து வருவதனைக் காணலாம். எடுத்துக் காட்டாக இங்கு சொர்ணாளியில்லாது பறையிசைக்கப்படும் முறைமை தனித்துவமானது.

இதேபோல் அடையாளச் சடங்கு, கொடிமரம் நிறுத்தும் சடங்கு, வதனமார் காவல் புரிதல், வயிரவர் ஊஞ்சலாடல், கிரகசாந்தி வழிபாடு, மாரியம்மன் குளுர்த்தி ஏடு படித்தல், தெய்வக்காரர்களின் சந்ததித் தொடர்ச்சி, சடங்கிற்கான உரித்துடைமை முதலியன தனித்துவங்களைக்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# பொதுவரையறைக்குள் செயற்பாடுகள் அவசியம்

பெருந்தோட்டத் தொழிற்றுறை படிப்படியாக வீழ்ச்சியடைந்து வரும் நிலையில் தொழிலாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி வருகின்றது. பெருந்தோட்டத் துறையில் நிலவும் நெருக்கீடுகளால் பல தொழிலாளர்கள் மாற்றுத்தொழில்வாய்ப்பு கருதி தோட்டத்தை விட்டும் வெளியேறி வருவதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்நிலையானது மலையக சமூகத்தின் செல்நெறிகளில் ஒரு புதிய கட்டமைப்பினையும் உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



இதேவேளை பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறையின் அதிருப்தி நிலைமைகளால் மாற்றுத்தொழிலை நாடிச் செல்ல முனையும் தொழிலாளர்களின் தொழில் அபிவிருத்தி மற்றும் வருமான மேம்பாடு கருதி மலையக அரசியல்வாதிகள் கவனம் செலுத்துவதோடு உதவிகள் பலவற்றையும் பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவையுள்ளது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

பெருந்தோட்டத் தொழிற்றுறை ஒரு காலத்தில் நாட்டின் முதுகெலும்பாக காணப்பட்டது. இலங்கையின் தேசிய வருமானத்தில் பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறை கணிசமான வகிபாகத்தைக் கொண்டிருந்தமையும் தெரிந்த விடயமாகும். இதனடிப்படையில் 1959 ம் ஆண்டில் இலங்கையின் அந்நியச் செலாவணி உழைப்பில் தேயிலையின் வகிபங்கு 59.6 வீதமாகக் காணப்பட்டது. இது 1969 இல் 57.8, 1974 இல் 39.1, 1976 இல் 43.6, 1980 இல் 35.1, 1985 இல் 33.1, 1986 இல் 27.2, 1988 இல் 26.2, 1989 இல் 24.3,1990 இல் 24.9 வீதமாக அமைந்திருந்தது.



எனினும் பின்வந்த காலங்களில் தேயிலையின் மூலம் இலங்கை பெற்றுக் கொண்ட அந்நியச் செலாவணியின் பங்கு குறைந்துசென்றபோதும் கூட, அதுவே மிக முக்கிய உற்பத்தியாக இருந்து வருகின்றது என்பது உண்மையாகும். 1989 ம் ஆண்டின் தரவொன்றிற்கமைய தேயிலையினால் பெறப்பட்ட வருவாய் 13,664 மில்லியன் ரூபாய்களாகும். தைத்த ஆடைகளினால் பெறப்பட்ட ஏற்றுமதி வருவாய் 17,631 மில்லியன் ரூபாய்களாகவும், தைத்த ஆடைகளுக்காக இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களுக்கான அந்நியச் செலாவணி 9,981 மில்லியன் ரூபாய்களாகவும், புடவைத் தொழில்களில் கிடைக்கும் உண்மை வருவாய் 7,650 மில்லியன் ரூபாய்களாகவும் அமைந்திருந்தது.

1995 காலப்பகுதியில் இலங்கையின் தொழிற்படையில் 10 வீதத்தினரும், விவசாயத் தொழில்களில் ஈடுபட்டுள்ளோரில் 12 வீதத்தினரும் தேயிலைத் தொழிலைச் சார்ந்தவர்களாக இருந்தனர். இலங்கையின் மொத்த விவசாய நிலப்பரப்பில் 10 வீதமான நிலப்பரப்பு தேயிலைப் பயிர்ச்செய்கைக்காகவே ஒதுக்கப்பட்டிருந்தது. இலங்கையில் 1985 இல் 231,650 ஹெக்டேர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடப்பட்டது.

துரைசாமி நடராஜா



இலங்கையின் தேயிலை உற்பத்தி குறித்து நோக்குகையில் 1945 இல் 125.6 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. 1960 இல் 197.5, 1970 இல் 221.2, 1976 இல் 196.6, 1980 இல் 191.3, 1985 இல் 214.1, 1987 இல் 213.7, 1990 இல் 233.0 மில்லியன் கிலோ கிராம் தேயிலை இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டது. இவற்றுள் பெருந்தோட்ட தேயிலை உற்பத்தியும் கணிசமான செல்வாக்கு செலுத்தி இருந்தது. தேயிலை உற்பத்தியானது நிலச் சீர்திருத்தத்தின் பின்னர் படிப்படியாக வீழ்ச்சி நிலையை எதிர்நோக்கியது. எனினும் 1985 இல் உற்பத்தி அதிகரித்த நிலையில் 1988 இல் 1965 ம் ஆண்டு உற்பத்தியை எட்டிப் பிடித்திருந்தது. இந்நிலையில் 1989 இல் 9 வீத வீழ்ச்சி கண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை 1995 இல் பெருந்தோட்டத் தேயிலை உற்பத்தி 168.8 மில்லியன் கிலோ கிராமாகும். இது 2000 இல் 100.1, 2017 இல் 104.0 மில்லியன் கிலோ கிராம்களாக அமைந்திருந்தது.

### தாயகம் திரும்புதல்

இலங்கையின் பெருந்தோட்டங்கள் ஒரு காலத்தில் செல்வம் கொழிக்கும் விளை நிலங்களாகக் காணப்பட்டன. தோட்டத் தொழிற்றுறையில் தொழில் புரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் திருப்திகரமானதாக காணப்பட்டது. எனினும் படிப்படியாக பிற்காலத்தில் பெருந்தோட்டத் தேயிலைத் தொழில்புரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான வீழ்ச்சி நிலை ஏற்பட்டது.

இதனடிப்படையில் 1980 இல் 5,41,971 தொழிலாளர்கள் தேயிலைப் பெருந்தோட்டங்களில் பதிவு செய்து கொண்டிருந்தனர். 1985 இல் 458,617, 1990 இல் 408,784, 1995 இல் 302,743, 2000 இல் 277,886, 2005 இல் 246,478, 2010 இல் 212,826, 2015 இல் 158,322 தொழிலாளர்கள் தேயிலைப் பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களாக தம்மை பதிவு செய்து கொண்டிருந்தனர். தொழிலாளர்களின் எண்ணிக்கை இவ்வாறாக கீழ்நோக்கிய நகர்வினைக் கொண்டிருந்தமைக்கு பல காரணங்கள் உந்துசக்தியாக அமைந்தன.

தொழிலாளர்கள் தாயகம் திரும்பியமை, கம்பனியினரின் கெடுபிடியான போக்குகள், உழைப்பிற்கேற்ற ஊதியமின்மை எனப்பலவும் இதற்கு காரணமாக அமைந்தன. 1971 ம் ஆண்டு தொடக்கம் 1984 ம் ஆண்டு வரை 446,338 பேர் தாயகம் திரும்பி இருந்தனர். இதற்கேற்ப 1971 இல் 25,384, 1973 இல் 41,153, 1976 இல் 45,891, 1979 இல் 23,794, 1982 இல் 28,120, 1984 இல் 31,338 பேர் தாயகம் திரும்பி இருந்ததாக கடந்தகால அறிக்கைகள் வலியுறுத்துகின்றன. இந்நிலை பெருந்தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியுறுவதில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தி இருந்ததெனலாம்.

அத்தோடு 1958, 1977, 1981 ஆகிய ஆண்டுகளில் மலையக மாவட்டங்களில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டமை, 1972 இல் பெருந்தோட்டங்களை அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் ஏற்பட்ட வேலையின்மைப் பிரச்சினை, உணவுப் பற்றாக்குறை என்பவற்றால் ஏற்பட்ட பாதிப்புக்கள் உள்ளிட்ட பல காரணங்களால் பெருந்தோட்டத் தொழிலாளர்களில் பலர் வடமாகாணத்திற்கு சென்று குடியேறி இருந்தனர். 1981 இன் குடிசன மதிப்பீட்டு அறிக்கையின்படி இவ்வாறாக சுமார் 75,000 பேர் வரை வடமாகாணம் சென்று குடியேறி இருந்ததாக தெரியவருகின்றது.

இவ்வாறு சென்றவர்கள் இலங்கைத் தமிழர் செறிந்து வாழும் வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் காலப்போக்கில் தமது இந்திய, மலையக அடையாளங்களைக் கைவிட்டு உள்ளூர் மக்களுடன் கலந்துவிடும் போக்குகள் காணப்படுவதாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.



இவ்வாறான மக்கள் வெளியேற்றமானது குடித்தொகை ரீதியாக மலையக மாவட்டங்களில் இந்தியர்களின் வலிமையைக் குறைத்துவிட்டதோடு, பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறையில் தொழிலாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியுறுவதற்கும் அடித்தளமாக அமைந்தது.

பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறையில் நிலவும் அதிருப்தி நிலை காரணமாக சமகாலத்தில் தொழிலாளர்களின் எண்ணிக்கை மேலும் வீழ்ச்சி கண்டுள்ளது. சுமார் ஒரு இலட்சத்துக்கும் குறைவான

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# மறந்து போனதா கறுப்பு யூலை?

2009 முள்ளிவாய்க்கால் இனவழிப்புக்கு முன்பே 1983 யூலைத் திங்கள் தமிழர் வரலாற்றிலும் கூட்டு நினைவிலும் கறுப்பு வடுவாக நிலைத்து விட்ட ஒன்று. கொழும்பில் தலைவிரித்தாடிய இனப்படுகொலை வெளிக்கடை சிறைக்குள் உச்சம் கண்டது.



கறுப்பு யூலை நிகழ்வுகள் தமிழ்நாட்டில் எவ்வாறு எதிர்வினை கொண்டன என்பது உலகறிந்த வரலாறு. தமிழ்நாடெங்கும் மக்கள் கூடிக் கண்ணீர் வடித்தார்கள், குமுறினார்கள், கொதித்தார்கள். மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், பட்டினிப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், கண்காட்சிகள் தடையேதுமின்றி நடந்தேறின. தமிழ்நாட்டுத் தமிழர்கள் தஞ்சம் புகுந்த ஈழத் தமிழர்களை அரவணைத்து ஆற்றுப்படுத்தி ஆதரவளித்தார்கள். தமிழீழ விடுதலை இயக்கங்களுக்குத் தோழமை இயக்கங்கள் முகிழ்த்தன. தமிழீழப் போராளிக் குழுக்கள் தமிழ்நாட்டில் பணிமனைகள் அமைத்துத் தமிழ்நாடெங்கும் தங்கள் செயல்பாடுகளை விரிவாக்கின. தமிழீழ மக்களை யார் கூடுதலாக ஆதரிப்பது என்று தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் போட்டியிட்டுக் கொண்டன.


தங்கதுரை குட்டிமணி ஜெகன்
ஈழத் தமிழ் மண்ணில் எங்கும் பிணத்திரள்! எங்கும் பிணநெடி!
தங்கதுரை - குட்டிமணி - ஜெகன் உட்பட
37 பேர் படுகொலை!
சிறைக்குள் சிங்களவர்வெறியாட்டம்!

தமிழ்நாட்டின் இந்த உணர்வெழுச்சி பேரூர் சிற்றூர் எதனையும் விட்டு வைக்கவில்லை. எந்தப் பிரிவு மக்களும் இதிலிருந்து விலகி நிற்கவில்லை. அப்போது நான் ஆயுள் கைதியாகச் சிறையில் இருந்தேன். கறுப்பு யூலை தமிழ்நாட்டுச் சிறைகளில் எவ்வாறு எதிரொலித்தது என்பது பற்றிப் பிற்காலத்தில் இவ்வாறு எழுதினேன்:

அடக்குமுறை இன அழிப்பாகி அரச பயங்கரவாதம் கொலைத் தண்டவமாடிற்று. கறுப்பு யூலையில் வெளிக்கடைச் சிறையில் நடந்த கொடுவதைகளும் கோரக் கொலைகளும் நாகரிக உலகை அதிரச் செய்தன. தமிழகத்தைக் கொதிக்கச் செய்தன. கொதிப்பின் உச்சநிலை சிறைகளிலேதான். இங்கே சிறைத் தமிழர்களைப் பொறுத்த வரை ஆத்திரத்தோடு ஆற்றாமையும் சேர்ந்து கொண்டது – சட்டத்தால் தளையிடப்பட்டு அடைபட்டுக் கிடக்கிறவனால் சுவர் தாண்டிக் கடல் கடந்து கை நீட்டிக் கண்ணீரைத் துடைக்க முடியுமா?

தசையெலும்பைப் பூட்டி வைக்கலாம். தளும்பும் மனவுணர்ச்சிகளைக் கூடவா பூட்டி வைக்க முடியும்? மதுரைச் சிறையில் சிங்கள அரசதிபர் ஜெயவர்த்தனாவுக்குக் கொடும்பாவி கட்டிக் கொளுத்தினார்கள். நான் இருந்த திருச்சிராப்பள்ளிச் சிறையில் சிறைபட்ட அனைவரும் திரண்டு மௌன ஊர்வலம் நடத்தி மையத் திடலில் பொதுக்கூட்டமும் நடத்தினோம். சட்டம் விதி கருதாமல் நடந்த அந்நிகழ்வுகளில் சிறைப்பட்டோருடன் சிறைக் காவலர்களும் அதிகாரிகளும் கூட கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் நான் கறுப்பு யூலையை மட்டுமல்லாமல் ஈழப்போராட்டத்தின் வரலாற்றுத் தேவையையும் விளக்கிப் பேசினேன்.



**தோழர் தியாகு,**
**பொதுச் செயலாளர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம**

எல்லாச் சிறைகளிலும் ஒரு நாள் உணவு மறுத்து அந்த உணவின் மதிப்பைத் தமிழக முதல்வரின் தமிழீழ ஏதிலியர் உதவிநிதிக்கு அனுப்பி வைத்தோம். அதிகார வர்க்கம் வறட்டு விதிமுறைகளைக் காட்டி இதற்கெல்லாம் தடையிட்ட போது எதிர்த்துப் போராடினோம். 1983 ஆண்டிறுதியில் தமிழக அளவில் எல்லா மையச் சிறைகளும் சேர்ந்து போராடிய போது, முதல் கோரிக்கையே ஈழத் தமிழர்களுக்கு உதவும் உரிமை வேண்டும் என்பதுதான்.

1983 யூலைப் படுகொலை இந்திய நாடாளுமன்றத்திலும் எதிரொலித்தது. தலைமையமைச்சர் இந்திரா காந்தியே "நடப்பது இனக் கொலை, நாங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்" என்று முழங்கினார். அயலுறவுத் துறை அமைச்சர் நரசிம்ம ராவைக் கொழும்பிற்கு அனுப்பி "நீங்கள் நிறுத்துகிறீர்களா? நாங்கள் நிறுத்தவா?" என்று கேட்கச் செய்தார்.

*** *** *** *** *** *** *** ***



இது 2024. ஈழத் தமிழர் இனவழிப்பு முள்ளிவாய்க்காலில் உச்சம் கண்டு 15 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. இன வழிப்புக்கு ஈடுசெய் நீதி கோரித் தமிழீழத் தேசம் இன்றளவும் போராடிக் கொண்டுதான் இருக்கிறது. போர் முடிந்த பின்னும் போர்க்கைதிகள் (அரசியல் கைதிகள்) விடுதலை செய்யப்படவில்லை. தமிழர் தாயகத்தில் சிங்கள வன்பறிப்பு தொடர்கிறது. வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு-அவர்களுக்காகத் தவித்துக் கிடப்போருக்கு-விடை சொல்ல யாருமில்லை. ஐநா அறிக்கைகள், தீர்மானங்கள், ஆணையர் அறிக்கைகள் எதனாலும் தமிழர் தேசத்துக்கு அறத்தின் விடியல் தென்படவில்லை, நீதி விழிக்கவில்லை. தாயகத்தில் பண்பாட்டுப் படையெடுப்பு தொடர்கிறது. கட்டமைப்பியல் இனவழிப்பு விளைவச்சமின்றி நடந்தேறிக் கொண்டிருக்கிறது. இவற்றுக்கு ஈடு கொடுக்க முடியாமல் தமிழர் அரசியல் கரடு தட்டி நிற்கிறது.

1983இல் தமிழ்நாடு கண்ட எழுச்சி என்பது ஈழத்துக்கு ஆதரவான எழுச்சி மட்டுமன்று. 1965இல் இந்தி எதிர்ப்பு மொழிப்போருக்குப் பின் மங்கிக் கிடந்த தமிழ்த் தேசிய எழுச்சியின் மீட்பாகவும் அஃதமைந்தது. 1987 இலங்கை-இந்திய உடன்படிக்கையைத் தொடர்ந்து இந்திய 'அமைதிப் படை' ஈழ மண்ணை ஆக்கிரமித்த போது இந்திய நடவடிக்கை தொடர்பான மயக்கம் பாக்கு நீரிணையின் அக்கரையில் போலவே இக்கரையிலும் சற்றே தாக்கம் கொண்டது. இந்தியப் படையின் உண்மை நோக்கம் காலப் போக்கில் புலப்படப் புலப்பட தமிழ்நாட்டு மக்களின் பார்வையிலும் தெளிவு துளிர்த்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரஞ்செறிந்த போர் மீண்டும் தமிழ்நாட்டில் எழுச்சியுண்டாக்கிற்று. இந்திய அரசுக்கு அழுத்தம் கூடி இந்தியப் படை விலக வேண்டியதாயிற்று.



சிங்களப் படையை எதிர்த்துப் புலிப் படையின் போர்க்கள வெற்றிகளைத் தமிழ் நாட்டு இளைஞர்கள் கொண்டாடினார்கள். அதே நேரத்தில் தமிழ்நாட்டில் நடந்த சில கொலைத் தாக்குதல்களைத் தமிழக மக்கள் விரும்ப வில்லை. இவற்றின் உச்சமாக ராசிவ் காந்தி திருப்பெரும்புதூரில் மனித வெடிகுண்டுத் தாக்குதலுக்குப் பலியானது அவர்களிடம் மிகக் கடும் எதிர்வினையைத் தோற்றுவித்தது. அது அந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் தாக்கம் கொண்டது. எத்தனை உணர்வியல் நியாயங்கள் சொல்லப்பட்டாலும் அது அரசியல்வகையில் பெரும்பிழை ஆயிற்று என்பதில் ஐயமில்லை. ஈழத் தமிழர் போராட்டத்துக்கான தமிழகத்தின் ஆதரவியக்கத்துக்கு மட்டுமல்ல, தமிழ்த் தேசியத்துக்கே அது ஒரு பெரும் பின்னடைவாக அமைந்து விட்டது. பல்லாண்டுக் காலம் நீண்டு சென்ற அந்த நெருக்கடிக்கிடையே தமிழ்நாட்டில் ஈழ நெருப்பை அணையாமற்காத்தது தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு.

விடுதலைப் புலிகளின் ஆனையிரவுப் போர் வெற்றியும், அதையடுத்துப் போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையும், பொங்கு தமிழ் எழுச்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோற்றமும் 2004 இலங்கைப் பொதுத் தேர்தல் முடிவுகளும் தமிழ்நாட்டிலும் நல்ல விதமாக

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# நெருப்புக் குழந்தைகள்

## நூல் வெளியீட்டு விழா

கடந்த ஞாயிறு *21/07/2024* அன்று, லண்டன் *Totteridge Academy* ல், தமிழீழ எழுத்தாளர் திருமதி சாவித்திரி அத்துவிதானந்தன் அவர்களின் ‘நெருப்புக் குழந்தைகள்’ எனும் கரும்புலி மாவீரர்களின் வரலாறுகூறும் நூல், மிகச் சிறப்பாக வெளியிட்டுவைக்கப்பட்டது.



வழமைபோன்று இந்நிகழ்வு பொதுச்சுடர் ஏற்றலோடு ஆரம்பித்துவைக்கப்பட்டது. அதன் பின்னர் பிரித்தானியக் கொடியினை செல்வி சுரேகா சுதாகரனும், தமிழீழத் தேசியக் கொடியினை திருமதி கவிக்குயில் அவர்களும் ஏற்றி வைத்தனர்.







மாவீரர் இளநிலாவின் தாயார் திருமதி சிவபாக்கியம் அவர்கள் ஈகைச்சுடரினை ஏற்றி வைக்க, மாவீரர் அஜந்தி அவர்களின் சகோதரி திருமதி கௌரி அவர்களால் பொது மாவீரர் படத்திற்கான மலர்மாலை அணிவிக்கப்பட்டது.




இதனைத் தொடர்ந்து அனைவரினாலும் மாவீரர்களுக்கான அகவணக்கம், மலர் வணக்கம் ஆகியன இடம்பெற்றன.







இவற்றினைத் தொடர்ந்து, தமிழர்களின் பாரம்பரிய வாத்தியமான பறை இசை திரு வாகீசன் அணியினரால் இசைக்கப்பட்டது. பின்னர் தாயகப் பாடலுக்கான நடனம், மற்றும் தாயகப் பாடல்கள் இசைத்தும் எழுச்சிகரமாக நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து, தமிழீழ மருத்துவத்துறையில் கடமையாற்றிய வைத்தியர் திரு வாமன் அவர்களால் வரவேற்புரை இடம் பெற்றது. இவ்வுரையானது, சமகால அரசியல் விழிப்புணர்வுகளையும் உள்ளடக்கிய சிறப்புரையாகவும் அமைந்திருந்தது.









மகளிர் அணியில் கடமையாற்றிய திருமதி கலைவிழி அவர்களால் வெளியீட்டுரை நிகழ்தப்பட்டதனைத் தொடர்ந்து, இவ் வரலாற்று நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. திருமதி டிலானி சசிகுமார் அவர்கள் நூலினை வெளியிட்டுவைக்க, மாவீர்ர்இளையவளின்சகோதரன்திருதிருக்குமரன் அவர்கள் முதற்பிரதியினைப் பெற்றுக்கொண்டார். இதனைத் தொடர்ந்து விழாவிற்கு வருகை தந்த அனைவரும் நூலினைப் பெற்று சிறப்பித்து வைத்தனர்.

அடுத்து, நூலின் மதிப்பீட்டுரையினை திருமதி உமாகாந்தி அவர்களும், திரு ஜெயக்குமார் அவர்களும் மிகச் சிறப்பாக ஆற்றியிருந்தனர்.

இதன்பின்னர், நூலாசிரியரும், தமிழீழ எழுத்தாளருமான திருமதி சாவித்திரி அத்துவிதானந்தன் அவர்களின் ஏற்புரை, இந்நூல் பற்றிய உருவாக்கப் பின்னணியோடு, உணர்வுபூர்வமாக இடம்பெற்றது. இறுதியாக நன்றியுரை வழங்கப்பட்டு, தேசியக் கொடிகளின் கையேற்புடன் இந்நூல் வெளியீட்டு விழா இனிதே சிறப்பாக நிறைவேறியது.


# கல்வி, தாய்மொழி, தேச விடுதலை

# (ஃபின்லாந்து வரலாற்றுப் பின்னணி)

**பாகம் 6**

**கல்விக் கோட்பாடுகளுக்கான தேடலும் தேச நலனும்:**

கல்வித்துறைக்கான அடிப்படைக் கட்டுமானங்கள், தேசிய மறுமலர்ச்சிக்கான அடிப்படைச் சித்தாந்தங்களை உருவாக்கிக் கொண்டிருந்த ஃபின்லாந்தினர், தங்களுக்கான தனித்துவமான கல்வித்திட்டங்கள் தொடர்பான தேடல்களிலும் இறங்கினர். ஃபின்லாந்தின் தொடக்கக் கல்வியின் தந்தை (பிதாமகர்) என்றழைக்கபடும், யூனோ சைக்னெயெஸ் *(Uno Cygnaeus) - 1863* முதல் *1869* வரை தலைமைக் கல்வித்துறை ஆணையராக இருந்தபொழுது, சுவீடன், டென்மார்க், ஜெர்மனி, சுவசர்லாந்து, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்குப் பயணித்து, தொடக்கக் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் குறித்த ஆய்வுகள் செய்துவந்தார். ஜெர்மானி அறிஞர்களான ஏர்பர்ட் *(Herbert)*, சில்லர் *(Ziller)* மற்றும் சுவிசர்லாந்து அறிஞரான பெசுடாலோசியன் *(Pestalozzian)* வரையறுத்தக் கல்வியியல் கோட்பாடுகளின் கூட்டு வடிவத்தினையும் ஆய்வு செய்து வகுப்பறைகளுக்கான செயற்பாடுகளுக்கும், ஃபின்லாந்து கல்வியின் தொடக்கநிலை வகுப்புகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி வகுப்புகளுக்கு பரிந்துரைத்தார்.



யூனோ சைக்னெயெஸ் *(Uno Cygnaeus)*, தொடக்கநிலைக் கல்விக்கான செயற்திட்டத்தை, சுவிசர்லாந்தைச் சார்ந்த பெசுடோலோசியன் அவர்களின் கல்வியியல் கோட்பாடான *Pestalozzian pedagogy*யை முன்னிறுத்தி வரையறுத்தார். பெசுடோலோசியனின் கோட்பாட்டினை ஆங்கிலத்தில், *investing in the individual for the development of society* என்று விளங்கிக்கொள்ளலாம். அதாவது, சமூக வளர்ச்சிக்கான தனிமனிதர்களின் மேம்பாட்டினை வடிவமைப்பதே கல்வி என்று பொருள் கொள்ளலாம்.

பெசுடாலோசியன் கல்வியியல் கோட்பாட்டிற்கான அடிப்படையாக விளங்கியது ஜூயன் ரௌசீயே அவர்களின் சுதந்திரச் சிந்தனைக் கோட்பாடுகள்தான். சுவிசர்லாந்தின் ஜெனீவாவில் பிறந்தவரான, ரௌசீயேவின் கல்வியியல் கோட்பாடு தனித்தச் சிந்தனையுடைய குழந்தைகளின் வெளிப்படுத்தும் திறன் வளர்ப்பில் கவனம் செல்லுத்துவதற்கான அடிப்படையைக் கொண்டிருந்தன.

பெசுடாலோசியன், "குழந்தைகளின் தனித்தச் சிந்தனைகளை உள்ளடக்கிய அதேவேளை, குழந்தைகளுக்கே உரிய அழகுணர்ச்சிகளின் கலவையில் உருவாகும் மென்திறனை வளர்த்தெடுப்பதிலும், அதனோடு இணைந்த வன்திறன் செய்முறைப் பயிற்சிகளும் குழந்தைகளின் அடிப்படைக் கல்வியாக திகழவேண்டும்" என வரையறுத்திருந்தார்.



முனைவர் விஜய் அசோகன்,
கல்வியாளர்

மேலும், "வார்த்தைகள், எழுத்துக்கள், வரைபடங்களைக் காட்டிலும், செய்முறைக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து, ஒவ்வொரு குழந்தைகளின் தனித்தத் திறன் பாதிக்காத வகையில் வகுப்பறைக் கற்றல் கூட்டுச் செயற்பாடுகளாக மாற வேண்டும்" என்றும் எடுத்துரைத்திருந்தார். "குழந்தைகள் தங்களுக்கான கேள்விகளை அவர்களே திட்டமிட்டு, பதில்களைஅவர்களேதேடும்விதமாக வகுப்பறைப் பயிற்சிகள் இடம்பெற வேண்டும், மாறாக, முன்பே தயாரிக்கப்பட்டக் கேள்விகள் அதற்கான பதில்களைச் சொல்லும் கருவிகள் போல குழந்தைகள் இருக்கக்கூடாது" என்றும் பெசுடாலோசியன் எடுத்தியம்பினார்.



சமூகக் கூட்டு உளவியலை பிரதிபலிக்கும் சமூகநீதியின் அங்கமாக வகுப்பறைகளும் பள்ளிச் சூழலும் விளங்க வேண்டும் என்று *1801*லேயே, *How Gertrude Teaches Her Children* என்ற நூலில் விளக்கப்படுத்தியும் இருந்தார் பெசுடாலோசியன். உளவியல் அறிந்துக் கற்றுக்கொடுக்கும் சூழலை உருவாக்குவது ஆசிரியர்களின் அடிப்படைத் தேவை என்றும் வரையறுத்திருந்தார்.

ஜூயன் ரௌசீயே கல்வியியல் கோட்பாட்டிற்கும் பெசுடாலோசியன் கல்வியியல் கோட்பாட்டிற்கும் மிக முக்கியமான வேறுபாடு இங்குதான் உள்ளது. குறிப்பாக, "தனிமனித சுதந்திரத்தையும் மேம்பாட்டினையும் உருவாக்கும் அதேவேளை, சமூகப்பொறுப்புணர்வினைவெளிப்படுத்தும் சிறந்தக் குடிமக்கள் உருவாக்குவதையும் சேர்த்துப் பிணைப்பதே கல்வி" என்பது பெசுடாலோசியன் கோட்பாடு. அதனை மிக வலுவாக உணர்ந்திருந்தாலும், நடைமுறைச் செயற்பாடுகளுக்கான வரையறை வழங்குவதில் ஜீயன் ரௌசீயே வெற்றிப்பெறவில்லை என ஸ்மித் மார்க் என்பவர் *"Johann Heinrich Pestalozzi: pedagogy, education and social justice, The encyclopedia of pedagogy and informal education"* என்ற ஆய்வுக்கட்டுரையில் விளக்கப்படுத்தியிருக்கிறார்.

பெசுடாலோசியன் முதன்மைப்படுத்தியப் புள்ளிகளே ஃபின்லாந்தின் தொடக்கக் கல்விக்கான அடிப்படை விதிகளாக *19*ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் *20*ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியிலும் வலுவாக இடம்பெற்றது.

**ஏர்பர்டினிய-சில்லர் (Herbert-Zillerism)**

ஃபின்னிஷ் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் அடிப்படையை ஏர்பர்டினிய-சில்லர் *(Herbart-Ziller)* கோட்பாடுகள் அதனை ஒட்டிப் பின்னபப்பட்ட கல்வியியல் சீர்த்திருத்தங்கள் தீர்மானித்தன.

ஏர்பர்டினியக் கோட்பாடு, "பாடத்திட்டங்கள் வடிவமைப்பு ஆசிரியர்களே ஒவ்வொரு வகுப்பறைகளிலும் உருவாக்க வேண்டும், மாணவ, மாணவிகளின் கூட்டு உளவியலையும் தனித்த உளவியல்களையும் கணக்கில் கொண்ட வகுப்பறைச் செயற்பாடுகள் ஆர்வம் தூண்டும் விதமாகவும் எல்லோரையும் ஈர்த்து, கூட்டாகப் பங்களிப்புச் செய்வதையும் உறுதிப்படுத்த வேண்டும்" என்று வரையறுத்தது.

இதனோடு *1860*இல் ஜெர்மன் நாட்டின் இன்னொரு கல்வியியல் கோட்பாட்டாளரான சில்லர், ஏர்படினியக் கோட்பாட்டையும் இணைத்து இன்னொரு வடிவத்தினை அளித்திருந்தார், "அதில், குடிமகன்களின் சமூகப் பங்களிப்பு, கிருத்துவப் பண்பாட்டைப் பேணிக்காக்கும் விதமாகவும் இருத்தல் வேண்டும்" என வகுத்திருந்தார். (இவைகளில் பலவற்றை *1940*இல் கைவிட்டுவிட்டு, புதிய மாற்றங்களை நோக்கி நகர்ந்தனர், அடுத்தடுத்தப் பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளது).

சுருக்கமாகச் சொல்லவேண்டுமெனில், ஃபின்லாந்தின் தேசியக் கட்டுமானத்தையும் சமூகநலக் கோட்ப்பாட்டியையும் தொடக்கக் கல்வியிலும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிப் பாடத்திட்டத்திலும் இணைத்தனர்.

மிக முக்கியமாக, "வகுப்பறை ஆசிரியர்களே நாட்டின் பொறுப்புள்ளக் குடிமகன்(ள்)கான நடைமுறை எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும்", என்பதும் "நாட்டின் பண்பாட்டு வரலாறுகளை அடுத்தத் தலைமுறைகள் அறிந்து நற்சிந்தனைக் குடிமகனாக உருவாகி வருவதற்கான அடிப்படையை விதைப்பதே ஆசிரியர்களின் கடமை" என்பதும் ஃபின்லாந்து ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் அடிப்படைப் பாடமானது.

**ஃபின்லாந்து ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்:**

சமத்துவக் கல்வி, பரவலாக்கம் அடைந்த கல்வி மையங்கள், தனித்திறன் வளர்ப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும் தொடக்கக் கல்விப் போலவே, ஃபின்லாந்தின் கல்வித்துறை வளர்ச்சி



யில் பெருந்தாக்கம் செலுத்தியவை, ஆசிரியர் பயிற்சிகள். சிறந்ததொரு ஆசிரியர் பயிற்சி வகுப்புகளால் உருவாக்கப்படும் தரமான ஆசிரியர்களாலேயே தலைச்சிறந்தக் கல்வியை

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# இந்திய கடற்படை சந்தித்த பேரிழப்பு

வேல்ஸில் இருந்து அருஸ்

இந்தியாவின் பல்நோக்கு தாக்குதல் பிரிகேற் வகை போர்க்கப்பல் கடந்த ஞாயிற்றுக் கிழமை(21) மும்பாயில் உள்ள கடற்படைத் துறைமுகத்தில் தீப்பிடித்து எரிந்த பின்னர் கடலில் மூழ்கியுள்ளது.

ஐ.என்.எஸ் பிரமபுத்ரா என்ற கப்பல் பாராமரிப்பு மற்றும் தரமுயர்த்தும் பணிகளுக்காக மும்பாய் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த சம்பவத்தில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் காணாமல்போயிருந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட தீவிபத்தை கடற்படையினர் அணைத்தபோதும் தீயை அணைப்பதற்கு பயன்படுத்திய அதிகளவான நீரினால் கப்பலின் சமநிலை தவறியதால் கப்பல் சரிந்து வீழ்ந்து கடலில் மூழ்கியுள்ளது. இந்தியாவின் முன்னணி தாக்குதல் கப்பலான பிரமபுத்ராவின் விபத்து தொடர்பில் விசாரணைக்குழு ஒன்றை அமைத்துள்ளது இந்திய அரசு.



இந்தியாவின் *Garden Reach Shipbuilders and Engineers Limited* என்ற நிறுவனத்தினால் கட்டப்பட்ட இந்த 3,850 தொன் எடை கொண்ட கப்பல் 6,000 கோடி ரூபாய்கள் பெறுமதியானதுடன் 2000 ஆம் ஆண்டு கடற்படையில் இணைக்கப்பட்டிருந்தது. இந்த வகை 3 கப்பல்களை இந்தியா கட்டியிருந்தது. நடுத்தர மற்றும் குறுந்தூர ஏவுகணைகள், வான் பாதுகாப்பு பீரங்கிகள், தரை மற்றும் கடலில் உள்ள இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைகள். கடற்படைக் கப்பல்களைத் தாக்கும் ரோபிடோ வகை ஏவுகணைகள் போன்ற ஆயுதங்களை கொண்ட இந்த முன்னரங்கு தாக்குதல் பிரிகேற் வகை கப்பலில் 40 அதிகாரிகள் உட்பட 450 கடற் படையினர் பணியாற்றுகின்றனர்.




மும்பாய் துறைமுகத்தில் இந்திய கடற்படையினர் சந்தித்த மூன்றாவது மிகப்பெரும் இழப்பு இதுவாகும். 2013 ஆம் ஆண்டு ஐ.என்.எஸ் சிந்துராக்சாக் என்ற ரஸ்யத் தயாரிப்பான டீசலில் இயங்கும் நீர்மூழக்கிக்கப்பல் ஒன்றும் வெடித்துச் சிதறியிருந்தது. இந்த சம்பவத்தில் 3 அதிகாரிகள் உட்பட 18 கடற்படையினர் கொல்லப்பட்டிருந்தனர். தவறான செயல்முறைகளே இதற்கு காரணம் என கடற்படையினர் விசாரணையின் பின்னர் தெரிவித்திருந்தனர்.



அதேசமயம் 2016 ஆம் ஆண்டு இந்த துறைமுகத்தில் பாரமரிப்பு பணிகளுக்காக நிறுத்தபட்டிருந்த பிரமபுத்ரா வகையை சேர்ந்த பெற்வா என்ற பிரிகேற் கப்பல் கடலில் மூழ்கியதில் இருவர் கொல்லப்பட்டதுடன், 15 பேர் காயமடைந்திருந்தனர். அமெரிக்க கடற்படையினருடன் பயிற்சியில் ஈடுபட்ட பின்னர் நான்கு மாதங்களில் இந்த சம்பவம் இடம்பெற்றிருந்தது. அதன் பின்னர் 20 கோடி ரூபாய்கள் செலவில் வெளிநாட்டு நிறுவனத்தின் உதவியுடன் மீட்கப்பட்ட அந்த கப்பல் திருத்தப்பட்ட பின்னர் 2020 ஆம் ஆண்டு மீண்டும் சேவையில் இணைக்கப்பட்டிருந்தது.

தற்போது மூழ்கிய பிரமபுத்ரா என்ற கப்பலை கடலில் இருந்து வெளியே கொண்டு வருவதற்கே 25 கோடி ரூபாய்கள் செலவாகும் என தெரிவிக்கப்படுகின்றது. அதன் திருத்தப் பணிகளுக்கு இதனைவிட பல மங்கு பணம் செலவாகும்.

இந்த வகை கப்பல்களின் இழப்புக்கள் என்பது இந்தியாவால் உடனடியாக ஈடுசெய்ய முடியாதவை அதனை ஈடுசெய்வதற்கு நீண்டகாலம் எடுக்கும். 11 வருடங்களில் ஒரே துறைமுகத்தில் 3 முக்கிய கப்பல்களை இந்தியாவின் கடற்படை இழந்தது என்பது விபத்தாக பார்க்க முடியாது என தெரிவிக்கின்றனர் சில ஆய்வாளர்கள். 2007 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையில் 40 இற்கு மேற்பட்ட விபத்துக்களை சந்தித்துள்ளது.

இதனிடையே கப்பலில் வெடிப்பதிர்வு கேட்டதாகவும் கூறப்படுகின்றது. கப்பல் அதில் உள்ள ஏவுகணைகள் மற்றும் ஆயுதங்களுடன் தான் அங்கு நிறுத்தப்பட்டிருந்தது. ஆயுதப்பகுதியில் தான் தீ முதலில் பரவியதாக கூறப்படுகின்றது.

கே.எச்-35 கப்பல் எதிர்ப்பு ஏவுகணை வெடித்தாகவும் கூறப்படுகின்றது. ஆனால் இந்த ஏவுகணை வெடித்திருந்தால் கப்பல் முற்றாக அழிந்திருக்கவே வாய்ப்புக்கள் உள்ளது. அதாவது திருத்த முடியாது. கப்பல் மூழ்கிய பின்னர் துறைமுகத்தில் பணியாற்றிய வேற்று நாட்டவர்கள் சிலர் காணாமல் போயிருந்ததாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

கப்பலின் பிரதான கட்டளைத் தளம் நொருங்கியுள்ளதால் கப்பலை திருத்துவது கடினம் எனவும் கூறப்படுகின்றது. கப்பல் மூழ்கியுள்ள நிலையை பார்க்கும்போது அதனை மீட்பதும் கடினம் என்றே கருதப்படுகின்றது.

இந்தியாவிடம் உள்ள பிரிகேற் வகை கப்பல்களில் தற்போது மூழ்கிய கப்பலே மிகவும் சிறந்ததாகும். அது கே.எச் 35 வகையை சேர்ந்த 16 ஏவகணைகளையும், பராக் -1 வகையை சேர்ந்த 24 விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும், 324 மி.மீ ரோப்பிடோ ஓ.ரி.ஓ மெலறா துப்பாக்கிகள், இரண்டு சி கிங் வகை உலங்குவானூர்திகள் இறங்கும் தளத்தையும் கொண்டுள்ளது.

இந்த விபத்தை தொடர்ந்து இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே திருப்பதி துறைமுகத்திற்கு உடனடியாக சென்று விசாரணைகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இந்த விபத்து தொடர்பில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கிற்கும் அவர் விளக்கமளித்துள்ளார்.



2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற இஸ்ரேல் - லெபனான் போரின் போது மத்திய கிழக்கு நாடுகளில் தங்கியிருந்த இந்தியா, இலங்கை, மாலைதீவு, நேபாளம் போன்ற நாடுகளைச் சேர்ந்த மக்களை மீட்க இந்தியா மேற்கொண்ட சூக்கொன் என்ற படை நடவடிக்கையில் சக்தி என்ற மீட்புக் கப்பலுக்கு பாதுகாப்பாக பிரமபுத்ரா, பெற்வா மற்றும் மும்பாய் ஆகிய பிரிகேற் கப்பல்கள் சென்றிருந்தன.

பெற்வா கப்பல் 1998 ஆம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்டு 2004 ஆம் ஆண்டு கடற்படையில் இணைக்கப்பட்டிருந்தது. பிரமபுத்ரா 1994 ஆம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்டு 2000 ஆம் ஆண்டு கடற்படையில் இணைக்கப்பட்டிருந்தது.

இதனிடையே கடந்த 7 ஆம் நாள் ஈரானின் பன்டார் அபாஸ் கடற்பகுதியில் பராமரிப்புக்காக நிறுத்தப்பட்டிருந்த ஈரான் கடற்படையின் சஹான்ட் வகை பிரிகேற் கப்பலும் தீப்பற்றி எரிந்து கடலில் மூழ்கியிருந்தது. இந்த

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## பொதுவரை... தொடர்ச்சி ...

தொழிலாளர்களே தற்போது தோட்டங்களில் தொழில் புரிந்து வருவதாகவும் சில தகவல்கள் வலியுறுத்துகின்றன. தேயிலைத் தொழிற்றுறை இவர்களின் எதிர்பார்ப்பினை மழுங்கடிக்கச் செய்துள்ள நிலையில் அநேகமான தொழிலாளர்கள் வருமான மேம்பாடு கருதி மாற்றுத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் நகர்ப்புறங்களில் வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட பல இடங்களிலும் கடமையாற்றி வருவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

### கம்பனிகளின் இலாபநோக்கம்

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட வேலையைவிட்டு வெளியே வேலைக்கு செல்ல வேண்டிய நிலைமையானது,1992 ம் ஆண்டின் பின்னர் பெருந்தோட்டப்பயிரினை தனியார் மயப்படுத்தியதனால் ஏற்பட்ட விளைவாகும் என்பதை யாவருமறிவர். தனியார் மயப்படுத்திய பெருந்தோட்டக் கம்பனிகள், பிரித்தானியரைப்போல பெருமளவு தொழிலாளர்களை வழிநடத்தி பெருந்தோட்டங்களை முகாமைப்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை.

தொழிலாளர்களுக்கு உழைப்பிற்கான ஊதியத்தை வழங்கியும், தொழிற்சங்க சட்டத்தின் படி வழங்கவேண்டிய உரிமைகளை உரியவாறு வழங்கியும் அவர்களையும் சாதாரணமான மனித அபிலாஷைகள் உள்ள சமூகமாக பார்க்க தனியார் கம்பனிகள் விரும்பவில்லை. அவர்கள் அடிமைகளாகவே இருக்கவேண்டும் என்பதுடன் தேயிலை, இறப்பர் தோட்டங்களின் ஊடாக இந்நாட்டின் பொருளாதாரத்திற்கான அவர்களின் அர்ப்பணிப்பினைப் பார்க்காமல் அபரிமிதமான இலாபம் ஈட்டிக் கொள்வதே கம்பனிகளின் இலக்காகக் காணப்பட்டது.

தனியார்மயப்படுத்திய கம்பனிகளின் கொள்கைகளில் ஒன்றாக தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது என்றவாறு, ஏறக்குறைய இன்றளவில் 68 வீதமானவர்களுக்கான நிரந்தரத் தொழில் வாய்ப்பு நிறுத்திவிடப்பட்டுள்ளது' என்பதும் புத்திஜீவிகளின் நிலைப்பாடாக உள்ளது. தொழிலாளர்கள் மாற்றுத் தொழிற்றுறையை நாடிச் செல்லும் நிலையானது சமூக மட்டத்தில் ஒரு புதிய கட்டமைப்பினை ஏற்படுத்தியுள்ளதும் தெரிந்ததாகும்.

பெருந்தோட்ட மக்கள் நிலவுரிமை மற்றும் வீட்டுரிமை இல்லாத சமூகமாக இருந்து வருகின்றனர். இவர்களுக்கென்று கையளவு நிலமேனும் சொந்தமாக இல்லை. இதனால் இவர்களின் விவசாய நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளன. இந்நிலையில் தோட்டப்பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களை விவசாய நடவடிக்கை கருதி தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டு வருகின் றன. பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் போன்றவர்கள் தொடர்ச்சியாகவே இதனை வலியுறுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை தொழிலாளர்கள் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில் மலையக அரசியல்வாதிகள் வெறும் வாய்ச்சவடால்களோடு நின்று விடாமல் இம் மக்களின் வருமான மேம்பாட்டுக்காக பல்வேறு வழிகளிலும் உதவ முன்வருதல் வேண்டும். கால்நடை வளர்ப்பு, தையல் துறை அபிவிருத்தி, கையடக்கத் தொலைபேசி பழுதுபார்த்தல் உட்பட பல சுயதொழில் நடவடிக்கைகளுக்கும் அரசியல்வாதிகள் உதவிகளைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

புதிய தொழில்களை ஆரம்பிக்கும் நோக்கில் குறைந்த வட்டியில் வங்கிக் கடன்களை தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கவும் அரசியல்வாதிகள் முனைதல் வேண்டும். துறைசார் பயிற்சி நெறிகளையும், ஆலோசனை மற்றும் வழிகாட்டல் என்பவற்றையும் இளைஞர் யுவதிகளுக்கு பெற்றுக் கொடுப்பதும் இதிலொரு அம்சமாகும். இதற்கென திட்ட மிட்ட வேலைத்திட்டங்கள் மிகவும் அவசியமாகவுள்ளது. அத்தோடு மலையக அரசியல்வாதிகளின் ஒன்றிணைந்த செயற்பாடுகளும் இதற்கு வலுசேர்ப்பதாக அமையும்.

### நலனோம்புத் திட்டங்கள்

நாட்டில் வாழும் கிராமப்புற மக்களின் வாழ்க்கை அபிவிருத்திக்காக அரசாங்கம் உதவிகள் பலவற்றையும் பெற்றுக் கொடுத்து வருகின்றது. விலைச்சலுகை, கடன்வசதி, உற்பத்திப் பொருட்களுக்கான சிறந்த சந்தைவாய்ப்புக்கள் எனப் பலவும் இதில் உள்ளடங்கும். இந்த வாய்ப்புகளில் சிறிதளவேனும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை என்பது வருந்தத்தக்க ஒரு விடயமாகும். இந்நிலையில் 'இலங்கையர்' என்ற பொது வரையறையை மையப்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் நாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் நலன் கருதி நலனோம்புத் திட்டங்கள் பலவும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த வகையில் சமகாலத்தில் 'அஸ்வெசும' திட்டம் நடைமுறையில் உள்ளது. எனினும் இத்திட்டத்தின் ஊடாக வறுமை நிலையிலுள்ள மலையகத்தவர்கள் பலர் உள்ளீர்க்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் இருந்து வருவதும் தெரிந்ததாகும்.

இத்தகைய பல நிலைமைகளையும் கருத்தில் கொண்டு மலையக மக்களின் நலன் கருதி அரசியல்வாதிகள் உச்சகட்ட பங்களிப்பினை வழங்குவதும், உதவிகளை பெற்றுக் கொடுப்பதும் அவசியமாகும்.

• • •

## இந்திய கடற்படை ... தொடர்ச்சி ...

சம்பவத்தில் இரு கடற்படையினர் கொல்லப்பட்டிருந்தனர். இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் கடற்கொள்ளையர்களை தடுக்கும் பணியில் ஈடுபடவிருந்த சமயம் இந்த அனர்த்தம் நிகழ்ந்திருந்தது.

ஈரானிய கடற்படையில் உள்ள நவீன கப்பல்களில் இந்த கப்பலும் ஒன்று. ஈரானின் தொழில்நுட்பத்தில் உருவான இந்த கப்பல் 2021 ஆம் ஆண்டு ரஸ்ய கடற்படைக் கப்பல்களுடன் ஒத்திகையில் ஈடுபட்டிருந்தது. ஏ.ஈ.எஸ்.ஏ வகை ரடார்கள், 8 வான்பாதுகாப்பு இடைத்தூர வீச்சுக் கொண்ட ஏவுகணைகள், கப்பல்களை தகர்க்கும் ஏவுகணைகள் என்பன இந்த கப்பலின் சிறப்பு அம்சமாகும்.

2018 ஆம் ஆண்டு இதேவகை பிரிகேற் கப்பல் ஒன்று துறைமுகத்தில் மூழ்கியிருந்தது. அதன் பின்னர் 2021 ஆம் ஆண்டு ஈரான் கடற்படையின் இரண்டாவது மிகப்பெரும் கப்பலும் ஓமான் வளைகுடாவில் தீப்பிடித்து மூழ்கியிருந்தது. மேலும் ஒரு பிரிகேற் வகை கப்பல் 2021 ஆம் ஆண்டு பன்டர் அபாஸ் துறைமுகத்தில் மூழ்கியிருந்தது.

மீண்டும் ஒரு பனிப்போர் காலத்திற்குள் உலகம் மெல்ல மெல்ல நுளைந்துவருகையில் இரு துருவங்களாக மாற்றம் பெற்றுள்ள வடக்கு மற்றும் தெற்கு மண்டல நாடுகளின் தொகுதியைச் சேர்ந்த நாடுகள் ஒருவரின் பலத்தை மற்றயவர்கள் அழிப்பதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். உக்ரைன் போரை காரணமாக்கி உக்ரைன் படையினருக்கு கடற்படைக் கப்பல்களைத் தாக்கும் நவீன ஏவுகணைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கிவரும் நேட்டோ கூட்டமைப்பு ரஸ்யாவின் கருங்கடல் கடற்படையின் கப்பல்களை தொடர்ந்து குறிவைத்து வருகின்றது.

கருங்கடல் கடற்படைப்பிரிவின் கொடிக்கப்பலான மொஸ்கோவா கப்பலும் மூழ்கடிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இஸ்ரேலின் உளவு அமைப்பு ஈரானுக்குள் வைத்து ஈரானின் கடற்படை கப்பல்களை குறிவைத்து வருகின்றது.

அதேசமயம், இந்திய பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் ரஸ்யாவுக்கு சென்று வெசிங்டனில் இடம்பெற்ற நேட்டோவின் 75 ஆவது மாநட்டின் நோக்கத்தை சிதறடித்துள்ள நிலையில் இந்திய கடற்படை மிகப்பெரும் இழப்பை சந்தித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## நேட்டோ போன்ற ... தொடர்ச்சி ...

நாடுகளை ஒருங்கிணைத்து தாக்குதலை முறியடித்ததற்கு நான் அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையில் அபிரகாம் உடன் பாட்டை முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிறம் ஏற்படுத்தியிருந்தார். அதேபோல அபிரகாம் படைத்துறைக் கூட்டணியை நாம் அமைக்க வேண்டும்.

நூம் அமெரிக்காவின் எதிரிகளுக்கு எதிராகவே போரிடுகின்றோம். எங்கள் எதிரி உங்கள் எதிரி எனவே எமது வெற்றி என்பது அமெரிக்காவின் வெற்றி என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சில காரணங்களை முன்வைத்து அமெரிக்க செனட் சபையின் 70 இற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. நெத்தனியாகுவின் வரவுக்கு எதிராக அமெரிக்காவில் பெருமளவான ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பிலிப்பைன்ஸில் ... தொடர்ச்சி ...

எண்ணைப்படிவுகள்கடலில் காணப்படுகின்றபோதும், கடுமையான காற்று மற்றும் அலைகள் காரணமாக சுத்திகரிப்பு பணிகளை மேற்கொள்ள முடியவில்லை என போக்குவரத்துத்துறை செயலாளர் ஜெய்மி புறிஸ்ரா தெரிவித்துள்ளார்.

கேமி புயல் காரணமாக கடுமையான மழை மற்றும் பாதகமான காலநிலை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த புயல் காரணமாக தாய்வானில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக 3 பேர் கொல்லப்பட்டதுடன், பல நூறுபேர் காயமடைந்துள்ளனர்.

மூழ்கிய கப்பலில் இருந்து வெளியேறிய எண்ணை கடலில் பல கி.மீ தூரத்திற்கு பரவியுள்ளது. பிலிப்பைன்ஸில் இடம்பெற்ற விபத்துக்களில் இதுவே மிகவும் பெரியதாகும். இது தலைநகர் மனிலாவுக்கு மிகவும் ஆபத்தானது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கப்பல் போக்குவரத்திற்கான பாதையாக இந்த கடல் இருப்பதுடன், கரையில் பல்பொருள் அங்காடிகளும், மீனவ சமூகங்கள் வாழ்கின்ற பகுதிகளும் உள்ளது குறிப்பிடத்கதக்து.

## வேலையில்லா ... தொடர்ச்சி ...

அவகாசம் மிகவும் அதிகமாக இருக்கின்றது என தமது வேதனையை தெரிவித்துள்ளனர்.

கல்விக் கொள்கையில் மாற்றங்காண வேண்டும். அரசின் புதிய கொள்கை திட்டங்கள், வீதிக்கு இறங்கி போராட முடியாத கொள்கைகளாக இருக்க வேண்டும். அப்போது தான் வேலையில்லா பட்டதாரிகளுக்கான சுபீட்சமான எதிர்காலம் கிட்டும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

## மறந்து போனதா ... தொடர்ச்சி ...

எதிரொலித்தன. அமைதிக் காலத்தில் அரசுகளுக்கப்பால் தமிழக-தமிழீழ உறவுகளின் வளர்ச்சியும் தமிழ்நாட்டு மக்களின் பார்வையில் ஒளியூட்டியது.

மறுபுறம் அமெரிக்க-இந்திய வல்லரசுகளின் கமுக்க ஆதரவோடு இரணில் அமைதியைக் குலைத்துப் போர் தொடுக்க அணியமாகிக் கொண்டிருந்தார். புலிகளோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் எந்தக் கூறினையும் அவர் செயலாக்கினாரில்லை. ஒட்டுக் குழுக்களை ஆய்தக் களைவு செய்வதற்கு பதிலாக கருணா தலைமையில் ஒரு புதிய ஒட்டுக் குழுவையே அவர் உருவாக்கி வளர்த்து விட்டார். *2005* தேர்தலில் இராசபட்சே வென்ற பின் இந்திய வல்லரசின் துணையுடன் வெளிப்படையாகவே போருக்கு ஆயத்தங்கள் செய்தார். *2008*இல் தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டதும், போர் தீவிரமானதும் தமிழ்நாட்டில் ஒரு புதிய முழக்கத்தை முன்னுக்குக் கொண்டுவந்தன: போரை நிறுத்து!

*2008-09* காலத்தில் ''போரை நிறுத்து'' என்பது தமிழ்நாட்டின் பொது முழக்கமாயிற்று. மாணவர்கள், இளைஞர்கள், வழக்கறிஞர்கள், உழவர்கள், தொழிலாளர்கள், வணிகர்கள்... எல்லாத்தரப்பட்டவர்களும் போரை நிறுத்தக் கோரிப் போராடினர். வீரத் தமிழன் முத்துக்குமார் தொடங்கி அடுத்தடுத்த தீக்குளிப்புகள் நிகழ்ந்தன. தமிழ்நாட்டின் இந்த எழுச்சி அனைவரையும் களத்துக்கு அழைத்த போதே போராடுவது போல் நடித்த தலைவர்களும் இருந்தார்கள்.

ஆனால் இத்தனைப் போராட்டங்கள் செய்தும் போரை நிறுத்த முடியவில்லை. ஏன்? தமிழ்நாட்டுக்கு இறைமை இல்லை. வலுவான தொரு தமிழ்த் தேசிய இயக்கமும் இல்லை. இன்றளவும் நீதிக்கான போராட்டத்தில் வீச்சும் வேகமும் இல்லை. ஈழத்தில் போலவே தமிழ்நாட்டிலும் பதவி அரசியல்தான் மேலோங்கி நிற்கிறது. அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில் திமுக, அதிமுக உட்பட எந்தக் கட்சியும் தன் தேர்தல் அறிக்கையில் ஈழத் தமிழர் இனவழிப்பு பற்றிப் பேசவே இல்லை.

*1983*இலும் *2009*இலும் தமிழ்நாட்டில் கண்ட எழுச்சி நுரைபொங்கி வரும் பெருவெள்ளம் போன்றது. அந்த வெள்ளம் நிலையானதன்று. அது வடிந்து போகக் கூடியதே என்பதில் ஐயமில்லை. நிலையான எழுச்சிக்கு நீடித்த அரசியல் பயிற்சி தேவை. தமிழ்மக்கள் தமது அற வலிமையை உணர வேண்டும். அந்த அறவலிமையை அரசியல் வலிமையாக்கி, நீதிக்கும் விடுதலைக்குமான நீண்ட போரட்டத்தைத் தொடர வேண்டும். *83* யூலையும் *2009* மேயும் வீண்போக வில்லை, தமிழர்களுக்கு அற வலிமை ஊட்டியுள்ளன என்பதை உணரவும் உணர்த்தவும் வேண்டும்.

• • •

## இருப்பை உறுதி ... தொடர்ச்சி ...

கொண்டமைந்தவையாக இருப்பதனை ஆதாரங்களூடாக விளங்கிக் கொள்ளலாம்.

இவ்வாறு கிழக்கு தமிழர்களின் வழிபாட்டு முறைகளுடன் வாழ்வியல் பின்னிப்பிணைந்ததன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் இருப்பானது உறுதியாகியிருந்தாலும் தொடர்ச்சியாக பண்பாட்டு வாழ்வியல்கள் அழிவடைந்த வகையிலேயே வருகின்றது. இவை பாதுகாக்கப்பட்டு எதிர்கால சந்ததிக:கு கொண்டுசெல்லும்போது தமிழர்களின் இருப்பும் பாதுகாக்கப்படும்.

தமிழ் தேசியத்தினைப்பொறுத்தவரையில் தமிழர்களின் பாரம்பரிய வரலாறுகள் என்பது அசைக்கமுடியாத ஒரு இடத்தி னைக் கொண்டுள்ளது.அவையை நாங்கள் புறந்தள்ளிச்செயற்படமுடியாது. புறந்தள்ளிச் செயற்படும்போதே பௌத்த மேலாதிக்கம் அதனை சாதகமான பயன்படுத்தமுனைகின்றது.இதற்கு உதாரணமாக கதிர்காம கந்தன் ஆலயத் தினை குறிப்பிடமுடியும்.

தமிழர்கள் காலம்காலமாக பராமரித்துவந்த பண்பாடுகளையும் மத அடையாளங்களையும் தொலைக்கும் நிலைமையினை பயன்படுத்தி பௌத்த பேரினவாதம் அதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்கின்றது.எமது பாரம்பரியத்தினை தங்கள் பாரம்பரிய மாற்றிக் கொண்டு இன்று அபகரிப்புகளை செய்ய முனைகின்றது.இந்த நிலைமை எதிர்காலத்தில் மாற்றப்பட்டு எமது பாரம்பரியங்களை எதிர்கால சந்ததி கடைப்பிடிக்க வழியேற்படுத்தப்படும்போது எமது இருப்பு பாதுகாக்கப்படும்.

• • •

## மொட்டுவை ... தொடர்ச்சி ...

ரணிலிடம் இருந்தது...

ரணில் இறங்கிவரப்போவதில்லை என்ற நிலையில்தான் சீற்றமடைந்த நாமல் ராஜபக்ஷ கடுமையான அறிக்கை ஒன்றை இரு தினங்களுக்கு முன்னர் வெளியிட்டார். ''விடுதலைப் புலிகளைப் பிளவுபடுத்தியதைப் போல பொதுஜன பெரமுனவையும் ரணில் பிளவுபடுத்திவிட்டார்..'' என்பதுதான் நாமலின் அறிக்கையின் சாரம்.

நாமல் ஆத்திரத்தில் அவசரப்பட்டுத் தெரிவித்த அந்தக் கருத்தில் பல உண்மைகள் பொதிந்துள்ளன. முதலாவது, ரணிலின் செயற்பாடுகளால் பொது ஜன பெரமுன பிளவுபட்டுப் பலவீனப்பட்டுப் போயுள்ளது என்ற ஆதங்கம், இயலாமை நாமலின் கருத்தில் தொனிக்கிறது. அதனை நாமல் பகிரங்கமாகவே ஒப்புக் கொண்டுள்ளார் என்றும் கொள்ளலாம்.

இரண்டாவது, கட்சி பிளவுபட்டுள்ள நிலையில் உறுதியான தீர்மானம் ஒன்றை பொதுஜன பெரமுனவால் எடுக்க முடியுமா என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது. ஏனெனில் மொட்டு கட்சியில் ரணிலுக்கான ஆதரவே வலுவானதாக இருக்கின்றது.

நாமல் சொன்னது போல பொதுஜன பெரமுன இப்போது பிளவுபட்ட நிலையில்தான் இருக்கின்றது. கட்சியை வழிநடத்துவதாக அல்லது கட்சிக்குத் தலைமையை வழங்குவதாகக் கூறிக்கொள்ளும் ராஜபக்ஷக்களையும் அவர்களது நெருங்கிய உறவினர்களையும் தவிர கட்சியின் மற்றையவர்கள் ரணிலை ஆதரிக்கத் தயாராகத்தான் இருக்கின்றார்கள்.

கட்சியின் *145* நாடாளுமன்ற உறுப்பினர்களில் *75* பேர் ரணிலை ஆதரிக்கப் போதாகத் தெரிவித்துள்ளார்கள். கட்சியின் *12* மாவட்டத் தலைவர்களும் இதேபோன்ற நிலைப்பாட்டைத் தான் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

ராஜபக்ஷக்கள் என்னதான் நிலைப்பாட்டை எடுத்தாலும், மொட்டுக் கட்சியின் பெரும்பான்மையினர் ரணிலை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் இருக்கின்றார்கள். இது ரணிலுக்கும் தெரியும். அதனால்தான் ராஜபக்ஷக்களுடனான பேச்சுவார்த்தைகள் - பேரம் பேசல்களில் ரணில் இறுக்கமாக இருந்தார்.

ரணில் தனியாகச் சென்றால் தமது வேட்பாளர்ஒருவரைகளமிறக்குவது என்றகருத்தை ராஜபக்ஷக்கள் முன்வைத்தார்கள். திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் மொட்டுக் கட்சியின் உயர் மட்டக் கூட்டத்தில் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் ஏற்கனவே தமது விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

ஆனால், ''நாமல் ராஜபக்ஷக்கு காலம் இருக்கின்றது'' என்று மகிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் தெரிவித்திருந்தார். இதற்கு காலம் இருக்கின்றது என்பது மட்டும் காரணமல்ல. போட்டியிட்டால் நாமல் மண்ணைக் கவ்வுவார் என்பது மகிந்தவுக்குத் தெரியும்.

ஆக, தனியாக ஒருவரை களமிறக்க மொட்டு கட்சி தீர்மானித்தால் அது தம்மிக்க பெரோவாகத்தான் இருக்கும். ஆனால், அது ரணிலின் வாக்குகளைப் பிளவுபடுத்தி சஜித்துக்கான வெற்றிவாய்ப்பை அதிகரிக்கும்.! ராஜபக்ஷக்களைப் பொறுத்தவரை அது ஒரு தற்கொலை முயற்சியாகவும் முடியலாம்!

• • •

JR Print
www.jrprint.com
0208 503 6643
61, Hoe Street, Walthamstow
London E17 4SA
Email:jrprintuk@gmail.com
Fast, Relaible & Friendly Service
Guaranteed Delivery Within 72 Hours In Europe at Minimal Cost
Call For Free Guatation

## பாலஸ்தீன ... தொடர்ச்சி ...

முன் வைத்து சீனாவின் தலைநகர் பிஜீங்கில் இடம்பெற்ற மாநாட்டில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. பற்றா மற்றும் ஹமாஸ் அமைப்புக்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்த பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் அவை கைகூடவில்லை.

காசா மற்றும் மேற்குக்கரை பகுதிகளில் இடம்பெறும் போர் மற்றும் தாக்குதல்கள் இந்த அமைப்புக்களிடம் ஒரு ஒற்றுமை ஏற்படுவதற்கான அழுத்தங்களை தோற்றுவித்துள்ளது என கட்டாரை தளமாகக் கொண்ட உலக விவகாரங்கள் என்ற சிந்தனைப் பள்ளியின் அதிகாரியான ஒமார் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கடந்த *9* மாதங்களாக காசா பகுதி மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் இதுவரையில் *39,000* கொல்லப்பட்டதுடன், ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். ஏறத்தாள *2.3* மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

## ஜனாதிபதித் ... தொடர்ச்சி ...

கட்சி சார்பில் போட்டி யிடவுள்ள வேட்பாளர்கள் 50 ஆயிரம் ரூபாவையும், ஏனைய வேட் பாளர்கள் 75 ஆயிரம் ரூபாவவையும் கட்டுப் பணமாக செலுத்த வேண்டும் என்றும் தேர்தல் கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு தேர்தல்கள் ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள் ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

“செப்டெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் மக்கள் தெரிந்துகொள்வதற்காக இந்த அறிக்கை வெளி யிடப்படுகின்றது. தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஆகஸ்ட் 15ஆம் திகதி முற்பகல் 9-11 மணி வரை இராஜகிரியவிலுள்ள தேர்தல் கள் ஆணைக்குழுவில் ஏற்றுக் கொள்ளப் படும். தாக்கல் செய்யப்படும் வேட்புமனுக்கள் தொடர்பில் அன்றைய தினமே முற்பகல் 9-11.30 மணி வரை ஆட் சேபனைகளையும் தெரிவிக்க முடியும்.

எதிர்த் தரப்பு வேட்பாளர் அல்லது அவர் சார்பில் வேட்பு மனுத் தாக்கல் செய்யும் நபர்களால இந்த ஆட்சேபனைகளை முன்வைக்க முடியும். வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு முன்னர் சகல வேட்பாளர்களும் கட்டுப் பணத்தைச் செலுத்த வேண்டியது அவசியமாகும். அதற்கமைய தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட கட்சி சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் 50 ஆயிரம் ரூபாவையும், ஏனைய வேட்பாளர்கள் 75 ஆயிரம் ரூபாவையும் கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும்.

இன்று வெள்ளிக்கிழமை முதல் வேட்பு மனுத் தாக்கல் தினத்துக்கு முந்தைய தினமான ஆகஸ்ட் 14 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை காலை 8.30 முதல் மாலை 4.15 வரை தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதான நிதி அதிகாரியால் கட்டுப்பணம் ஏற்றுக்கொள்ளப்படும்” என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## ஊடகவியலாளர் ... தொடர்ச்சி ...

இசைப்பிரியனின் தாயார் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் புற்றுநோயால் காலமாகி விட்டார்.

நிமிர்வு, சமூகம் ஊடகம், எழுநா உள்ளிட்ட ஊடகங்களிலும் ஊடகவியலாளராகவும் பணி யாற்றியுள்ளார்.

ஊடகப் பணிகளை அர்ப் பணிப்புடனும், ஈடுபாட்டுடனும் செய்யும் ஊடகத் தோழமையின் திடீர் இழப்பு பேரதிர்ச்சி என தெரிவிக்கப்படுகின்றது.

## காச நோய் ... தொடர்ச்சி ...

பரிசோதனை செய்த மக்களை நாம் அவதானித்து வருகின்றோம். வாழ்நாளில் ஒரு முறை செலுத்தும் முறையில் இந்த மருந்து தயாரிக் கப்பட்டுள்ளது.

இந்த மருந்தை நோய் தடுப்புக்காக மட்டு மன்றி நோயை குணப்படுத்தவும் பயன்படுத்த முடியும். இவ்வாறு இரட்டைப் பயன்பாடுள்ள மருந்துகள் இதுவரைகண்டுபிடிக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழர் மண்ணில் ... தொடர்ச்சி ...

தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், குச்சவெளி பிர தேச செயலாளரின் கவனத்திற்கு குறித்த விடயம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து குறித்த நடவடிக்கை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரி விக்கின்றனர்.

இலந்தைக்குளம்பகுதியில்காலாகாலமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் போர் காரணமாக 1990ஆம் ஆண்டு மற்றும் அதனை அண்டிய காலப்பகுதிகளில் இடம்பெயர்ந்திருந்ததாகவும், அப்பகுதியில் மீள குடியமர்வதற்கான கோரிக் கையை அரசாங்கத்திடம் நீண்டகாலமாக முன்வைத்துவருவதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் தற்போது அப்பகுதி ஆக்கி ரமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படுவதாக மக்கள் குற்றம் சுமத்து கின்றனர்.

குறித்த பகுதியில் மக்கள் வாழ்ந்ததற்கான பிறப்பு அத்தாட்சி பத்திரம், இறப்பு அத்தாட்சிப் பத்திரம், காணி ஆவணங்கள் உட்பட உடைந்த பாடசாலைக் கட்டடம் மற்றும் அரச கட்டடங்களும் இன்னும் ஆதாரங்களாக காணப் படுகின்றன. வயல் வரம்புகளும் இன்னும் அழி யாமல் உள்ளது.

மண்வெட்டிக்காக பிடிக்கம்பு வெட்டி னாலே கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கும் அரச திணைக்களங்கள் பாரிய இயந்திரங் களினாலும், இயந்திர கை வாள்களினாலும் பெரும் பச்சை மரங்களை வெட்டி அழிப்பதற்கு எதிராக ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்க வில்லை என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

## கல்வி... தொடர்ச்சி ...

வழங்கமுடியும் என்பது ஃபின்லாந்தின் திடமானக் கோட்பாடுகளில் ஒன்றாகவே தொடர்ந்து இருந்து வந்துள்ளது.

ஃபின்லாந்து கல்வித்துறைச் சார்ந்த பல்வேறு ஆய்வுகள் இருப்பினும், அதனை அப்படியே ஏனைய நாடுகள் பின்பற்ற முடியா தவைக்கான முதன்மைக் காரணம், ஃபின்லாந்தின் பயிற்சிக் கல்லூரிகள் வழியே உருவாக்கப்படும் பன்மைத்திறன் கொண்ட, தேசியக் கட்டு மானத்தையும் நற்சமூகக் கட்டுமானத்தையும் உருவாக்கும் பொறுப்புணர்வுக் கொண்ட, தொடர் கற்றலுக்கு உட்படும் ஆசிரியர்கள் தான் என்று பல்வேறு கல்வியியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அதேப்போன்று ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் 1863-1922 ஆண்டுகளுக்கிடையேயானக் காலக்கட்டத்தில் ஃபின்லாந்தின் பரவலான அனைத்துப் பகுதிகளில் இருந்து அனைவரும் கல்விக் கற்க வசதியாக பல்வேறு ஊர்களில் கல்வியியல் கல்லூரிகள் அமைத்தார்கள்.

அருகமைப் பள்ளிகள் எப்படி எல்லா குழந்தைகளுக்கும் எட்டும் தூரத்தில் கட்டும் பொழுது, பல தரப்பட்டக் குழந்தை களுக்கும் கல்விச் சென்று சேர்வதில் வெற்றிப் பெற்றனவோ, அப்படி, பரவலாக பல்வேறு ஊர்களில் கல்வியியல் கல்லூரிகள் அமைந்தபொழுது ஃபின்லாந்தின் பெரும்பாலோருக்கும் பயிற்சிக் கல்லூரியில் சேர்வதற்குரிய வாய்ப்பை அதிகப்படுத்தியது. குறிப்பாக, பல்வேறு மகளிர் கல்வியியல் கல்லூரிகளும் உருவாக்கப்பட்டப் பின், ஃபின் லாந்தின் ஆண்-பெண் சமத்துவ மேம்பாடும் இதனால் வளர்ந்தது.

19ஆம் நூற்றாண்டின் மையக் காலக்கட்டத் தில் தான், ஆண்களுக்கு மட்டுமே என்றிருந்த கல்வி பெண்களுக்கும் கிட்டுகின்றது. இக்காலக் கட்டத்தில் பல ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் உருவாகின. தேசியக் கல்வி ஆணையம் உருவானது.

• • •

ஃபின்லாந்தில் அமைக்கப்பட்டிருந்த ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் மற்றும் பயிற்றுமொழிகள் குறித்தான ஆண்டுவாரியான அட்டவணை

| Year | Language | Location | Gender of students |
|---|---|---|---|
| 1863 | Finnish | Jyväskylä | Male and Female |
| 1871 | Swedish | Uuskaarlepyy | Male |
| 1871 | Swedish | Tammisaari | Female |
| 1880 | Finnish | Sortavala | Male and Female |
| 1896 | Finnish | Rauma | Male |
| 1896 | Finnish | Raahe | Female |
| 1899 | Finnish | Heinola | Female |
| 1900 | Finnish | Kajaani | Male |
| 1918 | Finnish | Suistamo | Female |
| 1919 | Finnish | Hämeenlinna | Female |
| 1921 | Finnish | Tornio | Female |
| 1921 | Swedish | Vaasa | Female |

## சிங்கள வேட்பா ... தொடர்ச்சி ...

கடந்த காலங்களில் என்ன செய்தார்கள் என்பதில் தமிழ் மக்களுக்கு உறுதியான ஒரு நிலைப்பாடு இருக்கும். இணைந்திருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களை சட்டரீதியாகப் பிரித்தவர் அநுரகுமார திசாநாயக்கதான். அது குறித்து எந்த வருத்தத்தையும் தெரிவிக்க இதுவரையில் அவர் தயாராக இல்லை. அவரை நாங்கள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் எமது தாயகக் கோட்பாடு துண்டுபட்டதாக இருக்கும்.

கொரோ காலத்தில் முஸ்லிம்களின் எதிர்ப் புக்கு மத்தியிலும் மரணித்த முஸ்லிம்களின் உடல் கள் எரிக்கப்பட்டன. அதற்கு அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் மூலமாக மன்னிப்புக் கேட்டுள்ளார்கள். ஆனால், இப்போது ஜூலை மாதம். ஜூலைக் கலவரத்தில் கொல்லப்பட்ட தமிழர்களுக்காக தான் மனம் வருந்துவதாக மன்னிப்புக் கேட்டபதாக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். ஆனால், ஒரு அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலமாக அரசாங் கம் மன்னிப்புக் கேட்கத் தயாராகவில்லை. ஆக, தேர்தல்கால அரசியலுக்காகக்கூட தமிழ் மக்களி டம் மன்னிப்புக் கோர இந்த பேரினவாத அரசுகள் தயாராக இல்லை.

அதனால், எந்தனை தடவைதான் அவர்கள் இங்கு வந்து உரையாற்றிச் சென்றாலும் ஒவ்வொரு தடவையும் தமிழ் மக்கள் முன்பாக அவர்கள் அம்பலப்பட்டுத்தான் போகின்றார்கள். அவர்கள் சொல்வதைச் செய்வார்கள் என்று நம்புவதற்கு எந்தத் தமிழ் மகனும் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# கருந்திரள் இருளுக்குள் மீண்டும் யூலை அலை ...



கண்பறித்தார், மண்பறித்தார் காணாமல்
போ நீ என்று கைகள் கட்டிச் சுட்டும்,
வெட்டியும் எம்மண் சாக்காடாய்ப்
போமென்றே எமைக் கொன்றொழித்தார்!

ஆனாலும் இன்னமும், எண்ணத்தில்
வேட்கைகொள்ளும் விடுதலைத் தீயைக்
கொன்றுபோடத் தெரியா மூடராய்த்
தென்னகத்தே சிங்களத்தார்!

கண்களைக் குத்திக் கிழித்தும், அவர்கள்
விடுதலைக்காய் மூட்டிய தீயின்
சுவாலையின் தீக்கண்களை உங்களால்
அணைக்கவே முடியவில்லை!!!
ஆனாலும் அவர்களை எம் தாய் மண்
முத்தமிட்டு அணைத்துக் கொண்டது!
தாய்மண்ணே நீ வாழ்க,
தமிழீழமே நீ எழுக!

**-காந்தள்-**

## தாயகமும் வாழ்வும்







